Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



Restaurant Tilko
10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)
TILKO
(C/1501)
Tilko Jaffna City Hotel
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (27.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 239
















# நீதிக்குப் புறம்பான கொலைகள் இலங்கையில் இடம்பெறவில்லை

## அமெரிக்க குற்றச்சாட்டை நிராகரித்தது அரசு

இலங்கையில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் எதுவும் இடம்பெற வில்லை எனத் தெரிவித்துள்ள அரசாங்கம் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் படையினரின் நற்பெயரைக் கெடுப்பதற்கான முயற்சி எனவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்டிருந்த 2011 ஆம் ஆண்டுக்கான உலக மனிதவுரிமை நிலைமைகள் குறித்த அறிக்கையில், இலங்கை படைத்தரப்பினர் மற்றும் அவர்களின் ஆதரவுடன் இயங்கும் துணை ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது

இந்நிலையில், இலங்கையில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் எதுவும் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ள படைத்தரப்பின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, அமெரிக்காவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போன்று இலங்கையில் துணை ஆயுதக் குழுக்களும் செயற்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை எவராவது நிரூபிக்க முடியுமானால், அது குறித்து அவர்கள் எந்த வேளையிலும் எமது கவனத்துக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## கணவனின் தாக்குதலில் உயிரிழந்தார் மனைவி

ஐந்து பிள்ளைகளின் தாயொருவர் கணவனால் பொல்லால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். கிளிநொச்சி திருநகரில் நேற்றைய தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யோகலிங்கம் - பிறேமினி (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார். குடும்பப்பிணக்கு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படும் கணவர் மனநலம் குன்றியவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட நீதவான் சிவகுமார் சடலத்தை வைத்தியசாலையில் பார்வையிட்டதுடன், பிரேதபரிசோதனை செய்த பின்னர் மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்த பின்னர் சடலத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஏ-35 வீதியில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

பரந்தன் - புதுக்குடியிருப்பு ஏ-35 வீதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலியானார். இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த பேனாட் கீதபொன்கலன் (வயது -58) என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதிப்புனரமைப்புப் பணியில் தனியார் நிறுவனம் ஒன்று ஈடுபட்டு வருகின்றது. குறித்த குடும்பஸ்தர் பரந்தனுக்கு சென்று மீளவும் துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பி வருகையில் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுளள நிறுவனத்தின

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சித் தலைவராக மீண்டும் தெரிவானார் சம்பந்தன்



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார

மட்டக்களப்பில் நேற்று ஆரம்பமான இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டின் பொதுச்சபைக் கூட்டத்திலேயே, அக்கட்சியின் தலைவராக சம்பந்தன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார

தமிழரசுக்கட்சியின் தலைவர் சம்பந்தன் தலைமையில் ஆரம்பமான பொதுச்சபை கூட்டத்தில் வருடாந்த அறிக்கையை செயலாளர் மாவை சேனாதிராசா கூட்டத்தில் சமர்ப்பித்ததையடுத்து தலைவர் செயலாளர் மற்றும் நிர வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

கட்சியின் தலைவராக இரா. சம்பந்தனும், செயலாளராக மாவை சேனாதிராசாவும் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.நிருவாகச் செயலாளராக குலநாயகம், பொருளாளராக எஸ்.ரி.ஆர். தியாகராஜா,

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை குறித்து ஆராய 3 நாடுகள் குழு நியமனம்

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் காரியாலயத்தின் ஊடாக இலங்கை தொடர்பாக ஆராய்வதற்காக 3 நாடுகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மனிதவுரிமைகள் ஆணையகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில், எதிர்வரும் ஒக்டோபர் 22 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள ஆய்வு குழு கூட்டங்களின் போது அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியா, ஆபிரிக்காவின் பெனின் ராஜ்ஜியம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளே நியமிக்கப்பட்டுள்ளன. குறித்த மூன்று நாடுகளும் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க அறிக்கைக்கு ஆதரவளித்து வாக்களித்திருந்தன.

## இளைஞனின் சடலம் மீட்பு

வல்லை புறாபொறுக்கிப் பகுதியில் அமைந்துள்ள பெற்றோல் நிலையத்திற்கு அருகில் உள்ள மதகினுள் நேற்று இரவு 8.30 மணியளவில் இளைஞன் ஒருவரின் சடலம் நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கரவெட்டி மேற்கு வீரபாலைத் தோட்டத்தைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## நவநீதம்பிள்ளையை அனுமதியுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. அண்மையில் வொசிங்டனுக்குச் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினருடனான சந்திப்பின் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் ஐ.நாவுடன் நெருக்கமாக இணங்கிச் செயற்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது. இதற்கு இலங்கைக் குழுவினர், நவநீதம்பிள்ளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு ஏற்கனவே பச்சைக்கொடி காண்பிக்கப்பட்டு விட்டதாக பதிலளித்துள்ளனர்.

ஆனால் அவர் தனது பயணத்துக்கு முன்பாக உண்மை கண்டறியும் அதிகாரிகள் குழுவொன்றை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுள்ளதாகவும் இலங்கைக் குழுவினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கூறியுள்ளனர்.

## யாழ். சென்.ஜோன்ஸ் மாணவன் கடத்தப்பட்டபின் விடுதலை?

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்ட பாடசாலை மாணவன் நேறறைய தினம் நல்லூர்ப்பகுதியில் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் பிற்பகல் கடத்தப்பட்டதாகவும், பின்னர் நேற்றுக்காலை நல்லூரில் கொண்டுவந்து இறக்கிவிடப்பட்டதாகவும் வெளியாகிய தகவலில் எவ்வித உண்மையும் இல்லையென யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

கடத்திச் செல்லப்பட்டு நல்லூரில் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட மாணவன் நேற்றைய தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவம் தொடர்பாக மாணவன் தெரிவித்ததாவது,

பாடசாலை முடிந்த பின்னர் கச்சேரி பஸ்ஸில் யாழ். பஸ் நிலையத்திற்குச் சென்றதாகவும் அங்கு நின்ற இளைஞர் ஒருவர் தனக்கு உதவி செய்யுமாறு தன்னிடம் கேட்டு தன்னைக் சிறியரக மோட்டார் சைக்கிளில் ஏற்றி கிளிநொச்சி கனகபுரம் வரை கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார். இரவு வேளை

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் தூதுவர் மீது எடுக்கப்படும் நடவடிக்கை



வடக்கில் இராணுவத்தைக் குறைக்க வேண்டிய தேவை உள்ளதாக கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின், வெளியிட்டுள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கருத்து தொடர்பாக பிரித்தானிய தூதுவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து வெளிவிவகார


19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் வசந்தத்தில் அக்கராயனுக்கு மின்சாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களுக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபையினரால் மின் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் பல வருடங்களுக்கு பின்னர் கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்கு அண்மையில் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. முறிகண்டியிலிருந்து பூநகரி வேரவில் வரைக்குமான 100 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின் விநியோகத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக அக்கராயன் வரைக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து ஏனைய பிரதேசங்களுக்கான் மின் விநியோக செயற்பாடுகள் படிப்படியாக இடம்பெறும் என இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன் தெரிவித்துள்ளார்

இதேவேளை, வட்டக்கச்சி பிரதேசத்திற்கான மின் விநியோக நடவடிக்கையும் இடம்பெறுள்ளது. 27 மில்லியன் ரூபா செலவில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (29)



## “மதுரம் கிட்ஸ்” விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'மதுரம் கிட்ஸ்' முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று நண்பகல் 1.30 மணிக்கு தலைவர் எஸ்.கே. கிருபாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் நாவலர் பாடசாலை அதிபர் சாந்தி வாகீசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (135)

## புகைத்தல், மது ஒழிப்பு தினங்களாக மே 31 - ஜூன் 16 வரை அனுஷ்டிப்பு

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவு இம் மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 16 ஆம் திகதி வரை புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினங்களாக அனுஷ்டிக்கவுள்ளது.

குறித்தகாலப்பகுதியில் சமுர்த்தி கொடி நிகழ்ச்சி திட்டமாக அறிவித்துள்ளது. கொடி வாரத்தில் கொடி விற்பனை மூலம் பெறப்படும் பணத்தினை சமுர்த்தி பயனாளிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழங்கப்படுமெனத தெரிவிக்கப்டுகிறது.

இம் மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 16 திகதி வரை சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு வாரமாக உலக நாடுகள் அனுஷ்டிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கில் புகைத்தல் மற்றும் மது விற்பனை பெரிதும் அதிகரித்துள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவு துண்டு பிரசுரங்களையும் விழிப்புணர்வு பிரசாரங்களையும் செய்து வருகின்றது. புகைத்தலால் பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படுமென பிரசாரங்கள் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் புகைப்பவர்களின் எண்ணிக்கை முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவு புள்ளி விபரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் 100 பேருக்கு காசநோய்

## டாக்டர் எஸ்.யமுனானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 100 பேர் காசநோய் தொற்றுக்குள்ளாகி உள்ளதாக யாழ்.மாவட்ட காசநோய் வைத்திய நிபுணர் எஸ். யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டின் வைகாசி மாதம் வரையான காலப்பகுதியில் 30 வயது முதல் 60 வயது வரையானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சளிப் பரிசோதனையின் மூலம் 100 பேருக்கு காசநோய் தொற்று இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது.

பொதுவாக இனங்காணப்பட்டவர்கள் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுடன் செயற்பட்டால் மற்றவர்களுக்கு இந்நோய்த் தொற்றானது ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

எனவே, சாதாரண இருமல் ஏற்பட்டால் வைத்தியசாலைகளில் சளிப்பரிசோதனை மேற்கொண்டால் காசநோய் தொற்று ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

அதனால் மக்கள் காசநோய் தொடர்பான விழிப்புணர்வை தம்மிடையே ஏற்படுத்த வேண்டுமெனவும் காசநோய் வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.(எஸ்)

## வற்றாப்பளை பொங்கல் ஆரம்ப நிகழ்வு

(முல்லைத்தீவு)

வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கலை முன்னிட்டு விளக்கெரிப்பதற்காக கடலில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நாளை பிற்பகல் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் யூன் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை வற்றாப்பளை அம்மனின் வைகாசிப் பொங்கல் நிகழ்வு பெரும் கோலாகலமாக நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மகாபொல நிகழ்வின் நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் 2010/2011 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட இந்நிகழ்வானது இன்று ஒரு மணி நேரம் முன்பதாக அதாவது காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## ஆற்று மணல் அனுமதி பெற அங்கலாய்க்கும் ஜெயபுரம் மக்கள்

ஜெயபுரம் முடக்கன் ஆற்றில் மணலை அள்ளுவதற்கு யாரிடம் அனுமதி பெறுவது எனத் தெரியாமல் அலைந்து திரிவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காலத்துக்குக் காலம் பிரதேச சபை, பிரதேச செயலகம், கிராம அபிவிருத்திச் சங்கம் எனப்பல்வேறு தரப்பினரிடம் அனுமதி பெற்று மணல் அள்ளி வந்த மக்கள் இப்போது மணல் அள்ளுவதற்கு மேற்படி தரப்பினரிடம் அனுமதி பெறச் சென்றால் எல்லோரும் கைவிரிப்பதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது 2ஆம் கட்ட வீட்டுத் திட்டம் இடம்பெற்று வரும் நிலையில் மணல் பெறுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (149)

## கூட்டுறவு பணியாளருக்கான மீள் பரீட்சை விண்ணப்பம்

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்பிரிவு மற்றும் சாதாரண தரப் பிரிவுப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கான மீள் பரீட்சை விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படுகின்றது.

எனவே, மேற்படி பயிற்சிகளில் பங்கு பற்றி மீள் பரீட்சை மற்றும் சித்தியின்மை அடைந்தவர்களுக்கான மீள் பரீட்சை விண்ணப்பத்தினை யூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் வே.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (எஸ்)

## சண்டிலிப்பாய் ஐயனாரில் மூன்று சிலைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலில் இருந்து மூன்று சிலைகள் களவாடப்பட்டுள்ளதாக கோவில் பூசகரினால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவிலில் இருந்து பூசகர் வெளியே சென்று திரும்பி வந்த போது குறித்த மூன்று சிலைகளும் திருட்டுப் போயிருப்பது தெரிய வந்திருக்கிறது.

கடந்த வாரம் கோவில் சிலைகள் திருட்டுப் போயிருப்பது தொடர்பில் ஒரு முறைப்பாடே பதிவாகியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறு இங்கிருந்து கடத்தப்படும் சிலைகள் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பெருமளவு பணத்திற்கு விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருந்தும் இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரிடம் பிடிபட்டு வருவதையடுத்து இது போன்ற சம்பவங்கள் குறைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)

## வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு www. katpahachcholai. com இனைப் பார்வையிடவும். (153)

## நடமாடும் வைத்தியசேவை இன்று ஜெயபுரத்தில்

(ஜெயபுரம்)

பூநகரி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடமாடும் வைத்திய சேவை ஒன்று இடம்பெறவுள்ளதாக ஜெயபுரம் சிவில் இராணுவ அதிகாரி லுக்கிதன் கமகே அறிவித்துள்ளார்.

இந்நடமாடும் சேவையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் கலந்துகொண்டு சகல விதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கவுள்ளனர். (149)

## பலாலி வீதியில் வயாவிளான் வரை பஸ்போக்குவரத்துக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள், 14 தனியார் மினி பஸ் வண்டிகள் என்பன காலையும், மாலையும் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடச் சம்மதம் தெரிவித்திருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிக்கான போக்குவரத்துச் சேவை குறைபாடு குறித்து ஊடகவியலாளர்களினால் ஏற்கனவே பிரதிப் பொலிஸ் மா அதிபருடனான சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் இலங்கை போக்குவரத்துச் சபையினர் ஆகியோரை அழைத்து இவ்விடயம் குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலந்துரையாடப்பட்டிருப்பதாகவும், இதன் அடிப்படையில் காலையும், மாலையும் குறித்த பாடசாலை வரை சேவையில் ஈடுபட இரு தரப்பினரும் சம்மதித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

நேற்று யாழ்சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற, வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இத் தகவலைத் தெரிவித்தார். (பா)



நூலக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நூலக வாரம் மற்றும் உலக புத்தக தின இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. அதில ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் மற்றும் விருந்தினர்களால் தேசியக் கொடி, பிரதேசசபைக் கொடி, உள்ளூராட்சிக் கொடி என்பன ஏற்றிவைக்கப்படுவதையும், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக நூலகர் அருளானந்தம் ஸ்ரீகாந்தலக்ஷ்மி உரையாற்றுவதையும், முப்பரிமாண நூலகம் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம்.

மனதைத் திறந்து வைத்திரு. நீ அறிந்ததைவிட பெரிய விடயம ஒன்று இங்கு நடந்துகொண்டிருக்கிறது. -இயன்லா வன்சான்ற்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மற்றவர்களுடன் வாழும் கலை!

தமிழர்களுக்கென்று தனியே ஒரு குணம் உண்டென்றால், அது மற்றவர்களைத் தமக்குச் சமமாக எடுக்க முடியாத குணம் தான் என்று சொன்னார் நண்பர். தனக்கு அதிகமும் தெரிந்தது யாழ்ப்பாணத் தமிழர்களைத்தான் என்பதையும் சேர்த்துச் சொன்னார். யாருடனும் இணக்கம் காண முடியாத அல்லது விரும்பாத குணமே நம்மை எப்போதும் போர் ஆவேச மன நிலையிலேயே வைத்திருக்கிறது என்றார். நம்மை உயரத்தில் தூக்கிவைத்துப் பேசுபவர்களை – நாம்தான் சரி என்று ஆமோதிப்பவர்களைத் தூக்கிவைத்துக் கொண்டாடுவதும், நம்மைக் கொஞ்சம் விமர்சித்து விட்டாலும் துரோகி என்று உறவைத் துண்டாடுவதுமாக மிகுந்த சுயநலத்தோடு இறுகிவிட்ட சமூகமாக இருக்கிறோம். இதைச் சொல்வதற்குக் கூட எதிர்ப்பாக ஒரு 'துரோகி' ஆட்டத்தை ஆடி முடித்துவிட தமிழினம் தயார்நிலையிலேயே இருக்கிறது.

வாழ்வு பற்றிய நமது அடிப்படை மனோபாவமே மாற்றமடைய வேண்டியிருக்கிறது. பழிவாங்குதலோ பகை தீர்த்துக் கொள்ளுதலோ வெற்றிகரமான வாழ்வுக்கு வழி அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இணக்கம் காண்பது இழிவுடைய செயலாகவும், இன்னா செய்தோர்க்குப் பதில் இன்னா செய்து காட்டுவதே என்றும் அதுவே மானமிக்க மனிதன் செயல் என்றும் நமக்கிருக்கும் வீர ரோச மனோபாவங்கள், எல்லோர்க்குமான நல்வாழ்வை உத்தேசித்து மாற வேண்டியிருக்கிறது.

நல்லிணக்க மார்க்கத்தை யோசித்துப் பார்ப்பது என்பது தோல்வியோ அவமானமோ ஆகிவிடாது; வாழ்வை வெற்றி கொண்டோம் என்றாகுமெனில்... ஏன் முயற்சிக்கக் கூடாது? உடனேயே அவர்கள் அதற்குத் தயாராக இல்லையே என்று ஒதுங்குவது சுலபம். நாம், உள்ள நிலைமையையும் உலக நிலைமையையும் புரிந்துகொண்டு மனப்பூர்வமாக முயற்சித்துப் பார்க்கிறோமா – பார்க்கத் தயாராக இருக்கிறோமா என்பதையே முதலில் கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதாவது, மற்றவர்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதோ தொடக்கம் அவர்களிடமிருந்தே வரவேண்டும் என்றோ ஒவ்வொருவரும் தத்தம் 'சரி'களுடன் காத்துக் கொண்டிருப்பது அல்ல. இணக்கத்தை நம்மிடம் இருந்து தொடங்க என்ன வழி என்றே கண்டறிந்து முதற்காலடியை வைப்பதற்கு மனங்கொள்ள வேண்டும்.

மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையின் அடிப்படையே அன்புதான். வாழ்வதற்கான இச்சையின் ஆதிவல்லமை அன்புதான்; அன்பின் மேல் கட்டப்பட்ட அறம்தான். நீதி, கருணை, சகோதரத்துவம், காதல், பாசம் என்றெல்லாம் பல நூறு முகம்கொண்டு அதுதான் மனிதனைக் கூடி வாழச் செய்தது; சமூகமாக ஆக்கியது; விலங்குகளின் தலைமகனாக நிறுத்தியது. இனிமேலும் அதுவே நம்மை அழிவிலிருந்து மீட்கக் கூடும். அன்பு செலுத்த இயலாமல் போவதே நரகம்.

மனித மனதின் அடிப்படையிலேயே ஒரு குரூரம் பதிவடைந்து கிடப்பதை நாம் உணருகிறோமா? நம் கல்வி முறைகளிலேயே அந்த குரூரம் கற்பிதம் செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது அல்லவா? இல்லாவிடின் ஏன் விட்டுக்கொடுப்புகள் இல்லாமல் போகிறது? பேசி இணக்கம் காணும் நம்பிக்கையின்றிப் போகிறது? தேசப்பற்று என்கிறோமே அது என்ன? எதற்காக, ஏன் இவ்வளவு வன்மம்? பலிகள்? வாழ்வைச் சிதைப்பதில் குரூரத் திருப்தி?

உண்மையான மனிதநேயம் என்பது பகைவெறுப்பையோ விரோதத்தையோ தூண்டும் விதமாக இராது; மக்களை அவற்றிலிருந்து மீட்டு இணக்கத்தினால் உருவாகும் இன்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வதாக இருக்கும்.

- ஆசிரியர்

# தொலைபேசி மூலம் நிதி மோசடி 482 சீனர்கள் பொலிஸாரால் கைது

## கொழும்பில் மட்டும் 17 பேர் சிக்கினர்

(கொழும்பு)

சர்வதேச நிதிநிறுவனங்களிடம் தொலைபேசி மூலம் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 482 சீனப் பிரஜைகள் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக சைனா டெய்லி தெரிவித்துள்ளது.

பாரிய தொலைபேசி மோசடிக் குழுவொன்றின் அங்கத்தவர்களை தாய்வான், மலேஷியா, இலங்கை, தாய்லாந்து, இந்தோனேஷியா, கம்போடியா, பிஜி ஆகிய நாடுகளின் பொலிஸாரின் உதவியுடன் இணைந்து சீனப் பொலிஸார், கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளதாக சீனக் குற்றப்புலனாய்வுப் பிரிவு பிரதி பணிப்பாளர் யாங் டோங் தெரிவித்துள்ளார்.

சீனப் பெருநிலப்பரப்பில் 177 பேரும், தாய்வானில் 286 பேரும், தாய்லாந்து மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் 19 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 510 தொலைபேசி மோசடி விவகாரங்களில் தொடர்புடையவர்கள், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சீனப் பிரஜைகளிடம் 73 மில்லியன் யுவான் (சுமார் 11 மில்லியன் டொலர்) மோசடி செய்தவர்கள் என யாங் டொங் தெரிவித்தார். சர்வதேச நீதித்துறை ஒத்துழைப்பில் இந்நடவடிக்கை பாரிய வெற்றியாகும் என அவர் கூறினார்.

சீன வங்கிகளில் இரு மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கொழும்பு ராஜகிரியவில் 6 பெண்கள் உட்பட 17 சீனப் பிரஜைகளை இலங்கை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

சீனாவின் கிழக்குப் பிராந்திய மாகாணமான ஜியாங்ஸு"வின் சுஸோவ் நகரிலுள்ள முதலீட்டு நிறுவனமொன்றில் தொலைபேசி மோசடி மூலம் 12.6 மில்லியன் யுவான் பணம் அபகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் நிதி முகாமையாளரான ஷா என்பவர் கடந்த நவம்பர் மாதம் முறைப்பாடு செயதிருந்தார். இதையடுத்தே இம் மோசடி விவகாரம் அம்பலமாகியது.

# தடைப்படும் மின்சாரம் கால அட்டவணை அறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் 28-05-2012 திங்கட்கிழமை, 30-05-2012 புதன்கிழமை மற்றும் 03-06-2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப் பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி ஆகிய இடங்களிலும்,

29-05-2012 செவ்வாய்க்கிழமை, 31-05-2012 வியாழக்கிழமை மற்றும் 02-06-2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும், 28-05-2012 திங்கட்கிழமை, 30-05-2012 புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் உரும்பிராய் மேற்குப் பிரதேசம், மருதனார்மடம் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சங்காபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய நந்தன வருஷ மணவாளக் கோல விழாவும் சங்காபிஷேக நிகழ்வும் எதிர்வரும் 05-06-2012 செவ்வாய்க்கிழமை 108 சங்காபிஷேக விழாவாக நடைபெறவுள்ளது. (60)

# 2013 ஆம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் தொழில்சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் 2013 ஆம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற சமூகக் கலந்துரையாடலின் போது பழைய நிர்வாக உறுப்பினர்களில் இருந்து புதிய தொழில் தருநர்கள் மற்றும் தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தலைவராகவும், தொழில் தருநர்களில் ஆறுபேரும் தொழிலாளர்களில் 5 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தொழில்தருநர் சார்பில் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்,

ராஜ்குமார், கே.பூரணச்சந்திரன், கே.தர்மகுலசிங்கம், ஜேக்கப், ஜே.குணசிங்கம், எஸ்.அருணாச்சலம் ஆகியோரும் தொழிலாளர் சார்பில் தெரிவுசெய்யபட்டோர், என்.கங்காசுதன், பி.பத்மநாதன், ஐ.சர்சிதானந்தன், ஜே.அருள்பிரகாஷ், எம்.குலசிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தொழில் நியாய சபை ஒன்றை ஆரம்பிப்பதற்கான தீர்மானம் தொழிலாளர்களுக்கு தொழில் சட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல்களை விளங்கக் கூடிய முறையில் வழங்குதல் போன்ற விடயங்கள் இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டுள்ளன. (எஸ்)

# மானிய எரிபொருள் விநியோகம் நெடுந்தீவில் மீளாய்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் மானிய எரிபொருள் விநியோகம், படகுகளின் பதிவு நடவடிக்கைகள் சீர்ப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மானிய எரிபொருள் விநியோகம் சீரின்மை மற்றும் படகுகளுக்கான பதிவுகள் சீர்ப்படுத்தப்படவில்லை என்று அப்பகுதி கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் நெடுந்தீவுப் பகுதிக்கு விஜயம் செய்து பதிவுக்குட்படாத படகுகளுக்கான பதிவுகளையும், எரிபொருள் மானிய விநியோகத்தையும் சீர்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே, 98 படகுகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டு வந்தது. அது தற்சமயம் 20 மாத்தில் 230 ஆக அதிகரித்திருப்பதாகவும் யாழ் கடற்றொழில நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(பா)

# திருடர்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம்

## வல்வெட்டித்துறை பொலிஸ் அதிகாரி அறிவிப்பு

(வடமராட்சி)

பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டால் திருடர் தொலலைகளைக் கட்டுப்படுத்தலாம் என்றும் இதற்குப் பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்புத் தேவை என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் சரியான தகவல்களைத் தரும் பட்சத்தில் தாம் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுற்ற பின்னர் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் கொள்ளைக் சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவுக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கொள்ளைச் சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட நபர்கள் வெளியூர் வாசிகள். இவர்கள் பட்டப்பகலில் உடுப்பு வியாபாரிகள், இரும்பு வியாபாரிகள் போல் போலி நடிப்புச் செய்து தோட்டம் பார்த்துவிட்டு பின்னர் இரவு ஊர் உறங்கும் நேரம் பார்த்து வீட்டினுள் இறங்கி கொள்ளையடிக்கின்றனர். இதற்குப் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் உங்கள் கிராமத்தில் யாரும் சந்தேகத்திற்கிடமாக நடமாடினால் தகவல் தரும்படியும் வியாபாரி போல் நடித்து வீட்டுக்குள்ளே வந்தால் யாரையும் அனுமதிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

எனவே உங்கள் கிராமத்திலும் சரி, வீட்டிலும் சரி சந்தேகத்தில் யாரும் நடமாடினால் 021 2263573 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சரியான இடம், சம்பவம் தொடர்பாக அறியத்தரும் பட்சத்தில் நாம் விரைந்து நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் கூறினார். (116)

# மணல் கொள்ளை அரியாலையில் அமோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை முள்ளிப் பகுதியில் நேற்றுமுன்தினமும் நேற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி மண் ஏற்றிய ஆறுபேர் இரு உழவு இயந்திரத்துடன் யாழ். பொலிஸாரால் பிடிக்கப்பட்டிருப்பதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக் கொண்டிருந்த மூன்றுபேரும் நேற்று அதிகாலை அப்பகுதியில் மேலுமொரு உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக்கொண்டிருந்த மூன்று பேருமாக ஆறு பேர் யாழ்.பொலிஸாரால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயன்படுத்திய இரண்டு உழவு இயந்திரங்களும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட யாழ். பொலிஸார் குற்றவாளிகள் மீது யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக அரியாலைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் கடத்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

## விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பதின்ம வயதுத் திருமணத்தின் மூலம் உருவாகும் மருத்துவ ரீதியானதும் சமூக ரீதியானதுமான பிரச்சினைகள் தொடர்பான விசேட கருத்தமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் யாழ்.முகாமையாளர் சம்மேளனம், யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பிரிவு -சி மற்றும் யாழ்.சத்துணவு சமூகம் ஆகிய இணைந்து நடத்தவுள்ள இக்கலந்துரையாடல் 28.05.2012 திங்கட்கிழமை அன்று மாலை 5 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறப்புப் பேச்சாளராக யாழ்.பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளரும், மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் ஆலோசகருமான மருத்துவ கலாநிதி கே.முகுந்தன் கலந்துகொண்டு சிறப்புரை ஒன்றை நடத்தவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சைக்கிள்களைப் பாதுகாக்க இவ்வளவு பணம் தேவையா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் பின்புறம் அமைந்துள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிள்களுக்கு அதிகரித்த கட்டணம் அறிவிடப்படுவதாக வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சைக்கிள் பாதுகாப்புக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் மாநகர சபையால் நிர்ணயிக்கப்படடுள்ள நிலையில் இங்கு சைக்கிள்களுக்கும் 10 ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள்களுக்கான பற்றுச்சீட்டே வழங்கப்படுகின்றது.

இதனால் பலரும் இதற்கான காரணம் கேட்டு முரண்படுவதைக் காணமுடிகின்றது. அத்துடன் இந்தச் சிட்டைகளில் மாநகர சபையின் இறப்பர் முத்திரை பதிக்கப்படவில்லை. எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (54)

# கிளிநொச்சியில் கசிப்பு குடும்பப் பெண்ணுக்கு அபராதம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கசிபபு உற்பத்தியாக்கும் கோடாவை தன்வசம் வைத்திருந்த பெண்ணுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பகுதியில் தனது வீட்டில் மேற்படி கோடாவை வைத்திருந்த சமயம் மதுவரித் திணைக்களத்தினால் குறித்த பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

எனினும் குறித்த பெண் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொள்ளாததன் காரணத்தால் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிபதி அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தார். (கே)

# பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13ஆம் திகதி திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆலயத்திலிருந்து பாடசாலை மாணவர்களின் அணி வகுப்புடன் கொடிச்சேலை ஆலயத்திலிருந்து பவனியாக கொடிக்கம்பம் வரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கொடியேற்றப்பட்டு, அருகில் இருக்கும் குழந்தையேசு கெபியில் வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 3ஆம் திகதி கடல்நடுவே எழுந்திருளி இருக்கும் புனித அந்தோனியாரின் திருச்சொரூபத்தில் வழிபாடுகள் இடம்பெறும்.

மறுநாள் 4ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணைத் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை முதல் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும், திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக கொடுக்கப்படும். அன்றைய தினம மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் புனிதரின் தேர்ப் பவனி இடம்பெற்று புனிதரின் திருச்சொரூப ஆசீருடன் திருவிழா நிறைவடையவுள்ளது. (21)


# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி-மாசேரி வரணி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 01.06.2012 வெள்ளிக்கிழமை காலை 7.02 மணி முதல் 8.38 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்தின் பிரதம குருவாக சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவத்திரு.சி.கா.கமலநாதன் அவர்களும், அருளாசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகளும் வழங்குவார். (60)

# பணிப்பாளர் சபை தெரிவு



(வடமராட்சி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப் பாளர் சபைத் தெரிவு கடந்த 20 ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இரண்டாவது தடவையாகவும் தம்பிராசா சந்திரதாஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றும் உபதலைவராக நா.சண்முகசுந்தரம் பணிப்பாளர்களாக ஆ.விஜயராம், வ.மகிபன், வி.குலராசசிங்கம், பா.சந்தியாப்பிள்ளை, சி.சிவபாலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இத்தெரிவு நிகழ்வின்போது யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (100)

# புதிய பஸ்நிலையம் பயணிகள் மகிழ்ச்சி

(வரணி)

வடவரணி கறுக்காய் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இதுவரை காலமும் பேருந்துத் தரிப்பிடம் இல்லாததால் பயணிகள் மழை காலத்தில் மழையிலும், வெய்யில் காலத்தில் வெய்யிலும் பேருந்துகளுக்காகக் காவல் நின்று சிரமப்பட்டனர்.

அண்மையில் தனியார் ஒருவர் முன்வந்து இந்தத் தரிப்பிடத்தை அமைத்ததால் தற்போது பிரயாணிகள் மிகவும் பயனடைந்து வருகின்றனர். (150)

# பொன்னாலை-நெல்லியான் வீதி சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பொன்னாலை நெல்லியான் வீதி சிரமதானம் மூலமாக துப்பரவாக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த பெருமுயற்சியின் பயனாக 20 வருடங்களின் பின்னர் திறக்கப்பட்ட சுழிபுரம் பொன்னாலை-நெல்லியான் வீதி இன்று சிரமதானப்பணி மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பொன்னாலை நெல்லியான் வீதி 1992ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டிருந்த நிலையில் மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று மீளவும் இவ்வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாகவும் பற்றைகளாலும் சூழப்பட்டுள்ள நிலையில் காணப்படும் இவ்வீதியில் மண் அரண் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ளமையினால் இவ்வீதியினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் மக்களும் இன்று சிரமதானம் மூலம் துப்பரவு பணியினை மேற்கொள்ளவுள்ளனர்.



# நாய்கள் தொல்லை


(யாழ்ப்பாணம்)

பாசையூர் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகாரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலையில் கடற்தொழிலுக்குச் செல்வோர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செல்வதாகவும், போகும் போது கல், தடி என்பவற்றைக் கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்படுகிறது. (21)

# மக்களின் வாழ்வாதாரம் உயர நாம் செயற்பட்டு வருகின்றோம்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய மக்கள் எங்கு வாழ்கின்றார்களோ அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த அங்கெல்லாம் நாம் கால் பதித்து செயலாற்றுவோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கர வெட்டி பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலர். பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கரவெட்டி பிரதேச செயலர் வரதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த கால யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளான எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பாரிய பொறுக்கு எமக்குண்டு.

இதனடிப்படையில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய விவசாய குடும்பங்களைச் சேர்ந்தோரிடையே பயனாளிகள் தெரிவை மேற்கொள்ளு மாறு நாம் கமக்காரா் அமைப்புக்களிடம் பணித்திருந்தோம். அதனூடாக பெற்ற பயனாளிகள் பட்டியலின் அடிப்படையில் இவ்விவசாய உபகரணங்களை வழங்கிவருகின்றோம்.

நாம் ஏனைய கட்சிகளைப்போல் அரசியல் வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தாது மிகவும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களை பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்வதற்காக அந்தப்பிரதேசங்களில் இருந்து கொண்டு செயலாற்றி வருகின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர் கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளருமான ஐ.சிறிரங்கசேஸ்வரன் (ரங்கன்), உரையாற்றுகையில்,

குறித்த பயனாளிகளை அந்தந்தப் பிரதேசத்தின் கமக்காரர் அமைப்புக்களினூடாகவே தெரிவு செய்திருந்தோம். கட்சி பேதங்களற்ற நிலையில் மிகவும் நலிவடைந்த விவசாய குடும்பங்களையே இப்பட்டியலில் தெரிவு செய்துள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களை (தெளிகருவி) நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கிவைத்தனர்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச அமைப்பாளர் செந்தில்நாதன், பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினர் பிரதீபன், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புண்ணிய கிராம விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், கோண்டா வில் வேதபாராயண அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்தும் புண்ணியக் கிராம விழா இன்று காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜ சர்மா அனத்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் பி.செந்தில்நந்தனன், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் மா.கோ.காண்டீபன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் எஸ்.சண்முக குமார்சிறப்பு அதிதியாகவும் கோண்டாவில் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவர் இ.நடராசா கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(27.05.2012 -ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 14 ஆம் திகதி. ஷஷ்டி முற்பகல் 10.44 வரை.
நட்சத்திரம் ஆயிலியம். முன்னிரவு 9.07 வரை. மரணயோகம்.
இராகுகாலம் 4.22 - 5.52 வரை. சுபநேரம் 8.52 - 10.22 வரை.
எமகண்டம் 11.52 - 1.22 வரை. குளிகைகாலம் 2.52 - 4.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உல்லாசப் பயணம், முக்கிய பெறுப்புக்களுடன பதவியுயர்வு, முன் கோபம் வேண்டாம். |
| ரிஷபம் | நற்கீர்த்தி உண்டாகும், எதிர்பாராத பணவரவுகள், குடும்பத்தில் மகிழ்ச்சி, பயணம் நிறைவேறும். |
| மிதுனம் | மனதில் பயப்பிராத்தி, தலையீடுகளைத்தவிர்க்கவும், மங்களகரமான காரியம் நிறைவேறும். |
| கடகம் | சாதனை படைத்தல், குடும்பத்தில் ஒற்றுமை, பெரிய மனிதர் நட்பு, ஆன்மீகத்தில் ஈடுபாடு. |
| சிம்மம் | அயலவர் போட்டி, நினைத்த காரியங்கள் வெற்றி, கடன்கள் குறையும், உடல் பாதிப்புக்கள். |
| கன்னி | வாழ்வில் கவலை, மங்களகரமான காரியங்கள் கைகூடும், மனச் சஞ்சலம், திருமணத்தடை. |
| துலாம் | தொழில் விருத்தி, பணியில் நிம்மதிக்குறைவு, சுமாரான குடும்ப ஒற்றுமை. |
| விருச்சிகம் | திடீர் இலாபம், எதிர்பாராத பயணங்கள், ஆலய வழிபாடுகள், உயரதிகாரிகள் பாராட்டு. |
| தனுசு | காரியானுகூலம், விதண்டாவாதம் தவிர்க்கவும், விருந்தினர் வருகை, புதிய நண்பர் |
| மகரம் | உறவினர் வருகை, பணப்பரிவர்த்தனை செய்வோர் அவதானம், சகோதரர் முன்னேற்றம். |
| கும்பம் | வெற்றி வாய்ப்பு, கௌரவமான பதவிகள் வரும், எதிர்பாராத பயணங்கள், சுபகாரியங்கள். |
| மீனம் | கழிதமூல நன்மை, நிதானத்தைக் கடைப்பிழகவும், முன்னெச்சரிக்கை, உல்லாசப்பயணம். |

# க.பொ.த உயர்தர பரீட்சை அடைவு மேம்பாட்டுச் செயற்றிட்டமும் மாணவர் விபரம் கோரலும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்று வரும் க.பொ.த உயர்தர மணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை மேம்படச் செய்வதற்கான பரீட்சை அடைவு மேம்பாட்டுச் செயற்பாட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் அறிவித்துள்ளார்.

இச் செயற்பாட்டுத்திட்டத்தின் ஒரு கட்டமாக ஜிஜசற் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கணித விஞ்ஞான மாணவர்களுக்கான கற்றல் கையேடுகள், அத்துடன் யாழ்.பல்கலைக்கழக இராசாயன பீடத்தினால் வெளியிடப்பட்ட இராசாயன செய்முறைகள் அடங்கிய இறுவெட்டுக்களும் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பரீட்சைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள மதிரி வினாத்தாள்களும், அதற்கான புள்ளித்திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்புக்களும் இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களுக்கான தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சிக்கான அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகூடப் பயிற்சிகளும் இவற்றுடன் கணித விஞ்ஞான பாடங்களுக்கான குறிப்புக்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பரீட்சை மேம்பாட்டுச் செயற்திட்டத்தில் பங்கேற்று பயிற்சி பெறவுள்ள பாடசாலை மாணவர்களின் விபரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அதிபர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இவ்விபரங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரத்தில் தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கென சங்கானை சிவப்பிரகாசமாக வித்தியாலய ஆசிரியை திருமதி உதயகலா நவதீசனால் எழுதப்பட்ட " தமிழ் இலக்கண நூல் " வெளியீட்டுவிழா நாளை பிற்பகல் 1.00 மணிக்கு சிவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் ந.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் வெளியீட்டில், ஆசியுரையினை இப்பாடசாலை அதிபர் வே.சிவசுந்தரமும், வாழ்த்துரையினை சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும், வெளியீட்டுரையினை வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் நிகழ்த்தவுள்ளனர். நூலின் மதிப்பீட்டுரையினை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பா.மகாலிங்கசிவம் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறைசார்ந்த கலாநிதி த.கலாமணி, கலாநிதி.திருமதி ஜெ.இராஜநாயகம், தமிழ் அருவி சஞ்சிகை உதவி ஆசிரியர் த.கணேசமூர்த்தி, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வ.நவரத்தினம் ஆகியோர் பிரதிகளைப் பெறவுள்ளனர். (06)

# பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் 8.6 மில்லியன் செலவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ்.பிரதேச அலுவலகம சுமார் 8.6 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புனரமைப்பு வேலைகளுக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் தற்போது ஈடுபட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிரதேச அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம், களஞ்சியசாலை, பாதுகாப்புக் கூடங்கள், இரு மாடிக் கட்டடம் என்பன நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த நிர்மாணிப்பு வேலைகள் யாவும் சுமார் 4 மாதங்களில் முடிவடையுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மணல் அள்ளிய மூவர் இப்போது விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)


அரியாலைப்பகுதியில் சட்ட விரோதமாக மணல் அள்ளிய மூன்று பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த அரச அலுவலர் ஒருவரும், வேறு சிலரும் இணைந்து குறித்த பகுதியில் புகையிரத பாதையில் குவிக்கப்பட்டிருந்த மணலை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது இவ்வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ்.நீதவான் மா.கணேசராசா மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)



பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் பணியாற்றிய தேசிய சேமிப்பு வங்கி யாழ்.மேற்தரக் கிளை இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களான எஸ்.சுதன், என்.நடராஜா லோத்மன் ஆகியோருக்கு நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவுக்கு வங்கி முகாமையாளர் எஸ்.இராகுலன் தலைமை தாங்கி உரையாற்றுவதையும், சுதன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதையும் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (01)

## தொழில்நுட்ப பரிசோதனை



இங்கிலாந்து - பெல்ஜியம் அணிகளுக்கு இடையிலான நட்புறவு கால் பந்து போட்டியில் "கோல் எல்லை" தொழிநுட்பத்தை பரிசோதனை முயற்சியாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வெம்ப்லலியில் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியிலேயே கால்பந்து அரங்கில் முதல் முறையாக கோல் எல்லை தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. இதன் போது வீரர்கள் அடிக்கும் கோல்கள் குறித்தும் பந்து எல்லையை கடப்பது' குறித்து "ஹவ்க் ஆய்" கெமரா தொழிநுட்பம் மூலம் அவதானிக்கப்படவுள்ளது. கிரிக்கெட் மற்றும் ரென்னிஸ் போட்டிகளில் பரவலாக பயன்படுத்தப்படும் இந்த தொழில்நுட்பத்தை பரிசோதனைமுயற்சியாக பயன்படுத்த பீபா தீர்மானித்திருந்தது. கால்பந்து போட்டிகளில் கோல் போடும் சர்ச்சை நீண்ட காலமாக நீடித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாமுவேல்ஸ் சதம் மீண்டது மே.தீவுகள்



(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சாமுவேல்ஸ், டரன் சாமி ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நெருக்கடியிலிருந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி மீண்டுள்ளது.

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறியது. ஒரு கட்டத்தில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுபெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியிருந்தது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த டரன் சாமி, சாமுவேல்ஸ் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 167 ஓட்டங்கணை இணைப் பாட்டமாகப் பெற்றது. இதில் சாமுவேல்ஸ் 15 பவுண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களையும், டரன் சமி ஒரு சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 88 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் அண்டர்சன், புரோட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## நட்பு கால்பந்து துருக்கி வெற்றி

(துருக்கி)

துருக்கி, ஜார்ஜியா அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்து போட்டி, ஆஸ்திரியாவில் நடந்தது. இதன் 12, 40ஆவது நிமிடத்தில் துருக்கியின் ஹமித், நூரி சகின் தலா ஒரு கோல் அடித்தனர். ஜார்ஜியாவின் டார்கமெட்ஜ் (51ஆவது நிமிடம்) பதில் கோல் அடித்தார். 82வது நிமிடம் கிடைத்த "பெனால்டி" வாய்ப்பில், செல்கக் ஒரு கோல் அடிக்க, துருக்கி அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த துருக்கி அணி தலைவர், இந்த வெற்றி சிறப்பான வெற்றியாகக் கருதுகின்றோம். நம்பு ரீதியான போட்டியாக இருந்தாலும் எங்கள் அணி வீரர்களுக்கு இது ஒரு சிறப்பான போட்டியாகவே கருதுகின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஹர்பஜன்சிங் கிசுகிசு

(புதுடில்லி)

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரும் மும்பை இந்தியன் கப்டனுமான ஹர்பஜன் சிங் மாடல் அழகி கீதா பஸ்ராவும் நெருங்கிப் பழகி வந்ததாக சில நாட்கள் செய்திகள் உலவின.

இதனால் இருவரும் காதலிப்பதாக பத்திரிக்கை வட்டாரங்கள் கிசுகிசுத்தன.

இப்போது ஒருபடிமேலே போய் இருவரும் செப்டம்பர் மாதம் திருமணம் செய்து கொள்ளவிருக்கிறார்கள் என்ற செய்தி கசிந்துள்ளது.

இருவரின் குடும்பத்தினரும் திருமணத்திற்கான தயாரிப்புகளில் இறங்கிவிட்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் இருவருக்கும் இங்கிலாந்தில் நிச்சயம் செய்யப்பட்டதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது. யார்க்ஷயரில் உள்ள கீதா பஸ்ராவின் இல்லத்தில் இந்த திருமண நிச்சயம் நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது.

இது கோலாகலத் திருமணமாக இருக்கும் என்றும் பாலிவுட் நட்சத்திரங்கள், கிரிக்கெட் வீரர்கள் அரசியல் தலைகள் என்று திருமணம் சிறப்பாக அமையும் என்று இப்போதே ஜலந்தர் அதற்கு தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

# பிரெஞ் ஒப்பன் ரென்னிஸ் கடுமையான சுற்றில் ஜோகோவிச்

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மோதும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், 111 ஆவது பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இதற்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது. இதில் ஆண்கள் ஒற்றையரில் ஜோகோவிச் பட்டம் வெல்ல கடுமையாகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர் முதல் சுற்றில் இத்தாலியின் போடிடோ ஸ்டாரசை சந்திக்கிறார். அதன்பின் அவுஸ்ரேலியாவின் ஹெவிட்டை இரண்டாவது சுற்றில் எதிர்கொள்கிறார். அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல பெடரர், நான்காவது சுற்றில் அர்ஜென்டினாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோ, காலிறுதியில் செக்குடியரசின் தாமஸ் பெர்டிச் ஆகியோரை எதிர்கொள்ளலாம்.

நடப்பு சம்பியன் ஸ்பெயினின் ரபெல் நடாலுக்கு எளிதாக அமைந்துள்ளது. இவர், காலிறுதியில் சேர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச், அரையிறுதியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே ஆகியோரை சந்திக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் மோதும்வாய்ப்புஏற்பட்டுள்ளது. பெலாரசின் விக்டோரியா அசரென்கா, காலிறுதியில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசருடன் விளையாடலாம். நடப்பு சம்பியன் சீனாவின் லி நா, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சுடன் விளையாடலாம்.

காலிறுதி, அரையிறுதி உள்ளிட்ட முக்கிய போட்டிகளில் முன்னணி நட்சத்திரங்கள் மோதுவதால், பிரெஞ்ச் ஓப்பனில் பட்டம் வெல்வதை எளிதாக கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



**பிரெஞ் ஓப்பன் தொடரின் கிண்ணம் அறிமுக நிகழ்வில் நடப்புச் சம்பியன்களான சீனாவின் லி நா மற்றும் ஸ்பெயினின் நடால் கிண்ணம் அறிமுகம் செய்வதைக் காணலாம்.**

# விரைவில் ஓய்வு

(மெல்போர்ன்)

ஸ்ரீவோ, பொண்டிங்கைப் போல நீண்ட காலத்துக்கு விளையாடாமல், விரைவில் ஓய்வு பெற்றுவிடுவேன் என, அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.



தற்போது கிரிக்கெட் போட்டிகளில் மகிழ்ச்சியுடன் பங்கேற்று வருகிறேன். அதேநேரம், 38, 39 மற்றும் 40 வயது வரை விளையாடும் வீரர்களைப் போல நான் இருக்க மாட்டேன். அவுஸ்ரேலிய அணிக்காக இன்னும் சில காலம் மட்டும் விளையாடுவேன் என்று நினைக்கிறேன்.

இதற்கு முன் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து போன்ற அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வெற்றி பெறவேண்டும். கப்டனாக இருக்கும் போதே இதை சாதித்து, பதவி யில் இருக்கும் போதே ஓய்வு பெற்று விட விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.



**யாழ். பிறிமியர் லீக் - 2012 ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றது. இப்போட்டித் தொடர் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது. இதன் போது கிண்ணம் அறிமுக நிகழ்வும், சீருடை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள அவ பிறன்ஸ் பவுண்டேசன் காரியலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (படப்பிடிப்பு : பார்த்தீபன்)**

## இரட்டையரில் சாதிப்போம்


(பாரிஸ்)

பிரெஞ் ஓப்பன் இரட்டையரில் பட்டம் வென்று சாதிப்பேன் என, இந்திய வீரர் மகேஷ் பூபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரெஞ் ஓப்பன் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். சமீபத்தில் முடிந்த ரோம் மற்றும் மாட்ரிட் ஓப்பன் இரட்டையரில் சக வீரர் போபண்ணாவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருப்பதால், பிரெஞ் ஓப்பனில் இம்முறை சம்பியன் பட்டம் வென்று சாதிப்போம் என்ற நம்பிக்கை உள்ளது.

இம்முறை லண்டன் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு நிறைய பதக்கம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. துப்பாக்கி சுடுதலில் அபினவ் பிந்த்ரா பதக்கம் வெல்வார் என நம்புகிறேன். இதேபோல வில்வித்தை, குத்துச்சண்டை உள்ளிட்ட போட்டிகளுக்கு திறமையான வீரர், வீராங்கனைகள் தகுதி பெற்றிருப்பதால், இந்தியாவுக்கு எட்டு முதல் பத்து வரை பதக்கம் கிடைக்கலாம் எனத் தெரிவித்தார்.

# விமானப்படை சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியான கூடைப்பந்தாட்டப் போட்டியில் விமானப்படை அணி வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.


யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் மின்னொளியில் கடந்த வியாழக்கிழமை இப்போட்டி நடைபெற்றது. இதில் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ். கூடைப்பந்தாட்ட அணியும் கடற்படை அணியும் மோதின. கடற்படை அணி 53 :51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத் தைப் பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை விமானப்படை அணியும் பொலிஸ அணியும் மோதின. இதன்போது விமானப்படை அணி 70 புள்ளிகளைப் பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களிடையே கூடைப்பந்தாட்டத்தை வளர்க்கும் நோக்கில் 13 வயதிற்குட்பட்டவர்களுக்காக சிறப்பு கூடைப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணியும் விளையாடின. இதில் மானிப்பாய் சர்வதேச பாடசாலை அணி வெற்றி பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, விளையாட்டுத்துறை அமைச்சின் கூடைப் பந்தாட்ட திட்டப்பணிப்பாளர் சமன் சமரக்கோன், யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, யாழ். பொலிஸ் நிலைய பொறுபபதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (93)

# இன்று ஆரம்பமாகின்றது யாழ். பிறிமியர் லீக் கிரிக்கெட்




(யாழ்ப்பாணம்)

யாழ். பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் இன்று முதல் எதிர்வரும் யூலை 23ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரின் இன்றைய முதல் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணியும், இரண்டாவது போட்டியில் கே.சி.சி.சி அணியை எதிர்த்து யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதவுள்ளன. இப்போட்டித் தொடரில் யாழ் மாவட்டத்திலுள்ள எட்டு முன்னணி அணிகள் பங்குகொள்கின்றன. ஜொலிஸ்ரார், சென்றலைற், யாழ். மத்திய கல்லூரி, மானிப்பாய் பரிஷ், கிராஸ்கோபேர்ஸ், ஜொனியன்ஸ், பற்றீசியன்ஸ் யாழ். சென்றல் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

# மாற்றுத்திறனாளிகள் போட்டி இறுதி நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி வள நிலைய வருடாவருடம் நடத்தும் மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நேற்று முற்பகல் 8.30 மணிக்கு ஆரம்பமான இப்போட்டி நிகழ்வு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப. பார்த்தீபனும் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெறவுள்ள இறுதி நாள் நிகழ்விற்கு ஆசிரிய ஆலோசகர் நி. முருகானந்தன் தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக டி.ஏ.என். தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.எஸ். குருநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய இறுதி நாள் நிகழ்வில் சுவட்டு நிகழ்வு, மைதான நிகழ்வு மற்றும் உடற்பயிற்சிக் கண்காட்சி மற்றும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (06)

# கூட்டுறவாளர் தின விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

90ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைப் பணியாளர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை கடந்த காலம் போன்று இம்முறையும் சிறப்பான முறையில் நடத்த யாழ். மாவட்ட கூட்டுறவாளர் சங்கம் முடிவு செய்துள்ளது.

அங்கத்தவர் மற்றும் பணியாளர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு: ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன், பெண்களுக்கான 5 கிலோ மீற்றர் மரதன், மற்றும் ஆண், பெண்களுக்கான 1500, 200, 100 மீற்றர் ஓட்டப் போட்டிகள், ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டம், ஆண், பெண்களுக்கான கயிறு இழுத்தல், அஞ்சல் ஓட்டம், அணிக்கு ஆறு பேர் கொண்ட துடுப்பாட்டம், பெண்களுக்கான வலைப்பந்து, ஆண்களுக்கான நீச்சல் போன்ற போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இப்போட்டிகளுக்கு சுற்று நிருபம் ஒவ்வொரு சங்கக் கிளைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.





தீவகத்தின் நாவலர் முன்பள்ளியில் நடைபெற்ற விளையாட்டின்போது வினோத உடைப் போட்டி நிகழ்வில் தினமுரசு பத்திரிகை விநியோகித்தல் போல் சிறுமி ஒருவர் மைதானத்திற்குள் வருகை தந்ததையும், அவருடன் ஆமை வடிவிலும், எலற்றோனிக் பாவனையாளர், வைத்தியர் போன்றும் வேடமிட்டு வந்தமை பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. (85)

# உயரப்புலம் மாணவி மாவட்டத்தில் சாதனை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மாவட்ட மட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ். உயரப்புலம் மெ.மி.த.க. வித்தியாலய மாணவி செல்வி ஜெ. ஜனார்த்தனி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில் சாதனை படைத்த இவ்வீராங்கனை மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)

# சர்வதேச தரக் கால்பந்து பயிற்சி; சென். ஜோன்ஸ் கல்லூரி ஏற்பாடு

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாடசாலை ரீதியாக கால்பந்தாட்டத்தை வளர்த்தெடுக்கும் முகமாக சென். ஜோன்ஸ் கல்லூரியினால் சர்வதேச தரத்திலான ஐந்து நாள் பயிற்சி முகாம் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த ஐந்து நாள் பயிற்சி முகாமிற்கு யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 40 பாடசாலைகளிலிருந்து சிறுவர், சிறுமிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேற்படி பாடசாலைகளிலிருந்தும் ஒவ்வொரு பயிற்றுநர்களும் இப்பயிற்சி முகாமிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி முகாம் குறித்து ஊடக சந்திப்பு சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன் ராஜாவினால் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதன் விபரம் வருமாறு: யாழ். மாவட்டத்தில் கால்பந்தாட்டத்தை வளர்க்கும் முகமாக எமது கல்லூரியினால் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம், யாழ். கால்பந்தாட்ட லீக் ஆகியவற்றின் ஊடாக ஐந்து நாள் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது. இதில் தரம் இரண்டு முதல் தரம் ஏழு வரையான மாணவ, மாணவிகள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இவர்களுடன் பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்றுநர்கள் பங்குபற்ற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிகளை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பயிற்றுநர் சுப்பிரமணியம் வழங்கவுள்ளார்.

சிறார்களுக்கு ஆரம்பத்திலிருந்தே கால்பந்தாட்டம் தொடர்பான அறிவை சரியான முறையில் வழங்கி கால்பந்து தொடர்பான ஆர்வத்தை ஏற்படுத்துதல், ஆரம்ப நிலை விளையாட்டு வீரர்களை பயிற்றுவிப்ப தற்கேற்ப பயிற்சியாளர்களை உருவாக்குதல் என்பன இதன் நோக்கமாகும்

அத்துடன் இவ்வாறான நிகழ்வுகளுக்கூடாக யாழ்ப் பாணத்து வீரர்களையும் தேசிய அணியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதே நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள கால்பந்தாட்ட பயிற்றுநர்களும் பயிற்சி நிகழ்வை பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.பி.)

# பிரச்சினைகளை வளர்த்தாதீர்கள்!

**“நான் புதியதாக மேயராக பதவி ஏற்றவன். முறைப்படி தாங்கள் தான் என்னை வந்து சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவசர நிலைமை காரணமாக நானே இங்கு வர வேண்டியதாகி விட்டது. பரவாயில்லை. உங்கள் இன மக்கள் திடீர் என்று போராட்டம் நடத்தக் காரணம் என்ன?”**

பண்டைய சீனத்தில் பதிமூன்றாம் நூற்றாண்டில் வடக்கு சுங் வம்ச சக்கரவர்த்திகள் ஆண்ட காலத்தில் நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சி இது.ஒரு எல்லை மாகாணத்தில் கோன் யுவான் (Con Yuon) என்ற அதிகாரி மேயராகப் பொறுப்பேற்ற போது மாகாணத் தலைமையிடத்தில் பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்கள் யாருமே இல்லாதது கண்டு ஆச்சரியப்பட்டார். அவரது அதிகாரிகளை விசாரித்த போது இராணுவமும், பொலிஸும் மாகாணத்தின் ஒரு எல்லையில் மூண்ட கலவரத்தை அடக்கச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அவர் பொறுப்பேற்ற மூன்றாவது நாளில் இன்னொரு எல்லையில் உள்ள, அவரது மாகாண அதிகார வரம்புக்கு உட்பட்ட, பழங்குடி மக்கள் ஈட்டி, வில் போன்ற ஆயுதங்களுடன் நகர வாயிலில் குவிந்து இருக்கும் செய்தி வந்தது. கோன் யுவான் தன் துணை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். துணை அதிகாரிகள் நகரத்தின் பிரதான கதவை இழுத்து மூடி பக்கத்து மாகாணங்களிடம் இருந்து இராணுவ உதவி பெறுவதே உத்தமம் என்றார்கள். அப்படி இராணுவ உதவிவரும் வரை தாக்குப் பிடிக்க முடிந்தால் அது பெரியதொருஅதிர்ஷ்டம்,அதைத் தவிர வேறு வழியில்லைஎன்றார்கள்.

கோன் யுவான் கேட்டார். “அந்தப் பழங்குடியினர் திடீர் என்று போராடக் காரணம் என்ன?”

அவரது துணை அதிகாரிகள், படிப்பறிவற்ற பழங்குடி மக்களுக்கு அதற்கெல்லாம் காரணம் பெரியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். அற்ப சொற்ப காரணங்களுக்காகக் கூட அவர்கள் போராடத் துணிபவர்கள் என்றுசொன்னார்கள். அதனால் முதல் வேலையாகப் பக்கத்து மாகாணங்களில் இருந்து இராணுவ உதவிபெற ஆளனுப்ப அவசரப்படுத்தினார்கள்.

கோன் யுவானோ முதலில் பழங்குடி மக்களைச் சந்திக்க ஆளனுப்புவதே சரி என்று சொன்னார். காரணம் அறியாமலேயே அவர்களை அடக்கிப் போராட்டத்தைத் தோல்வியடையச் செய்தாலும் இது போன்ற புரட்சிகள் மறுபடி வெடிக்க சாத்தியமுண்டு என்பதால் முதலில் யாராவது சென்று அவர்களைச் சந்தித்து என்ன பிரச்சினை என்பதை அறிந்து கொள்ளச் சொன்னார்.

பழங்குடி மக்களைச் சென்று சந்திப்பதில் சிறிதும் நாட்டமில்லாத அவர்கள் அவர் சொல்லுவது யதார்த்தத்திற்கு ஒத்து வராதது என்று கருதினார்கள். யாரும் போவதற்குத் தயங்கினார்கள். ஒரு சிலராகப் போய் பழங்குடியினரைச் சந்திப்பது ஆபத்தானது என்றார்கள்.

அவர்கள் தயக்கத்தைக் கண்ட மேயர் கோன் யுவான் தானே சென்று பழங்குடியினரைச் சந்திப்பதாகச் சொன்னார். அவர்கள் அவரைக் கூடுமான வரை தடுக்க முயன்றார்கள். ஆனால் அவர் கேட்பதாக இல்லை. துணைக்கு இரண்டு வயதான வேலையாட்களை அழைத்துக் கொண்டு கிளம்பினார். அவரது துணை அதிகாரிகள் இந்த முட்டாள் மேயர் திரும்பவும் உயிரோடு திரும்ப மாட்டார் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஒரு படையை எதிர்பார்த்திருந்து அதை எதிர்கொள்ளவும் தயாராக இருந்த பழங்குடி மக்கள் ஒரு தனி மனிதர் குதிரையில் இரு வேலையாட்களுடன் வந்த போது ஆச்சரியப்பட்டார்கள்.

கோன் யுவான் அவர்களிடம் சொன்னார். “நான் இந்த மாகாணத்திற்கு புதிய மேயராக சமீபத்தில் பொறுப்பு எடுத்துக் கொண்டவன். உங்களுடைய போராட்டத்திற்குக் காரணத்தை அறிய விரும்புகிறேன். தயவு செய்து தங்கள் தலைவரிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்”

அவர்கள் ஆச்சரியம் மேலும் அதிகரித்தது. அவர்கள் அவரை அவர்களுடைய தலைவரிடத்தில் அழைத்துச் சென்றார்கள். நகர எல்லையைக் கடந்து காட்டிற்கு பழங்குடியினர் தலைவரை சந்திக்கச் செல்வதில் ஆபத்தை உணர்ந்த அவருடைய வயதான வேலையாட்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லி நின்று விட்டார்கள். ஆனால் கோன் யுவான் தனியாகவே பழங்குடியினர் தலைவரை சந்திக்க குதிரையில் பயணத்தைத் தொடர்ந்தார்.

பழங்குடியினர் தலைவருக்கும் இவரைக் கண்டவுடன் வியப்பு. அவரிடம் கோன் யுவான் சொன்னார். “நான் புதியதாக மேயராக பதவி ஏற்றவன். முறைப்படி தாங்கள் தான் என்னை வந்து சந்தித்திருக்க வேண்டும்.ஆனால் அவசர நிலைமை காரணமாக நானே இங்கு வர வேண்டியதாகி விட்டது. பரவாயில்லை. உங்கள் இன மக்கள் திடீர் என்று போராட்டம் நடத்தக் காரணம் என்ன?”

அவரைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரித்த பழங்குடி மக்கள் தலைவர் முந்தைய மேயரின் ஆட்சியில் தங்களுக்கு இழைக்கப்பட்டஅநீதிகளையும், அவர் நடத்திய முறைகேடுகளையும்,பழங்குடி மக்களுக்கு விதித்த அநியாய அதிக வரிகளையும், அதனால் அவர்களுக்கு வரப்போகும் பனிக்



காலத்திற்குத்தேவையான உணவின்மையையும், ஆடுமாடுகள் இல்லாததையும் விளக்கினார்.

கோன் யுவான் அவர்கள் சொன்னதில் இருந்த நியாயத்தை உணர்ந்தார். “முந்தைய மேயர் உங்களிடம் அநீதியாக நடந்து கொண்டதற்கு நான் உங்களிடம் மன்னிப்பு கோருகிறேன். இப்போது நீங்கள் என் பொறுப்பில் உள்ளவர்கள். உங்களுக்கு நல்லபடியாக வாழ வழி செய்து தருவது என் கடமை. நான் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நான் செய்து தருகிறேன். இப்போது இருட்டிவிட்டது. அதனால் இன்று உங்களுடன் தங்கி விட்டு நாளை காலை செல்கிறேன். என்னுடன் உங்கள் ஆட்களை அனுப்பினால் அவர்களுடன் உணவுப் பொருள்களையும், கால்நடைகளையும் அனுப்பி வைக்கிறேன்”

அன்று அவர்களுள் ஒருவராக அவர்களுடனே தங்கி மறு நாள் அவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு கோன் யுவான் நகரத்திற்குத் திரும்பினார். அவர்களுடன் அவர் வருவதைக்கண்ட அவருடைய துணை அதிகாரிகள் அவரைப் பணயக்கைதியாக அந்தப் பழங்குடியினர் அழைத்து வருவதாக எண்ணிக் கொண்டு அவர்களைத் தாக்க ஏற்பாடுகள் செய்தார்கள்.

ஆனால் கோன் யுவான்அவர்களைத் தடுத்துஉண்மையை விளக்கி பல டன்கள் உணவு தானியங்களையும், நூற்றுக் கணக்கான ஆடுமாடுகளையும்அந்தப்பழங்குடி மக்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்.

அவரைத் தெய்வமாகப் போற்றிய பழங்குடி மக்கள் எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும், என்ன உதவி அவருக்குத் தேவைப்பட்டாலும் தங்கள் உயிரைக் கொடுத்தாவது செய்வோம் என்று வாக்குறுதி தந்தனர். அது போலவே அவர் மேயராக இருந்த வரை நன்றியுடன் இருந்தார்கள்.

பல சமயங்களில் பிரச்சினைகளுக்கு உண்மையான காரணங்கள் என்ன என்பதை அறிந்து கொண்டு சரிவர அணுகினாலே அவற்றில் பாதிக்கு மேல் சரியாகிவிடும். நேரடியான அறிவு பூர்வமான அணுகுமுறையால் மலை போன்ற பிரச்சினைகளும் நம்மால் சரி செய்யக் கூடிய அளவுக்கு இலகுவாகிவிடும். அதே நேரத்தில் சிறிய பிரச்சினைகள் கூட மனிதர்களின் அலட்சியத்தாலும், ஈகோவினாலும், முட்டாள்தனத்தாலும் பூதாகரமாக மாறி விடுவதுண்டு.

**அதேபோல, பழங்குடியினரும் மேயரிடம் தங்கள் பிரச்சினையை விளக்குவதை மறுத்துவிட்டு, பழைய விரோதங்களுக்கும் தாம் அடைந்த நஷ்டங்களுக்கும் பழிதீர்ப்பதை நினைத்துக் கொண்டிருந்தால், தொடர்ந்து சண்டை அவலங்களைச் சந்தித்துக் கொண்டிருப்பார்களே தவிர, பிரச்சினையைத் தீர்த்திருக்க மாட்டார்கள்.**

இந்த உதாரணத்தில் தன் துணை அதிகாரிகள் சொன்னதைக் கேட்டு கோன் யுவான் படை திரட்டி அந்தப் பழங்குடி மக்களை ஒடுக்க நினைத்திருந்தால் ஏராளமான உயிர்ச்சேதம் இரு பக்கத்திலும் நிகழ்ந்திருக்கும். அப்படியே அவர்கள் ஒடுக்கப்பட்டாலும் கூட அது தற்காலிகமாகவே இருந்திருக்கும். சரியான சந்தர்ப்பத்திற்காக அவர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். அவர்கள் அரசாங்கத்தின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகவே என்றும் இருந்திருப்பார்கள்.

கோன் யுவான் தன் தலைமைப் பண்பினாலும், அறிவு கூர்மையாலும் பெரிய பிரச்சினையை சமாளித்த தோடு அவர்களைத் தனக்கு உதவக்கூடிய பெரும்பலமாக ஆக்கிக் கொண்டதில் இராஜதந்திரியாகவும், நல்ல தலைவனாகவும் மாறி விட்டார். அவருடைய துணை அதிகாரிகள் ஆரம்பத்திலும் சரி, கடைசியிலும் சரி தவறான முடிவுகளை எடுப்பவர்களாகவே இருந்தாலும் அதை அனுமதிக்காமல் சரியாகபிரச்சினையை கோன் யுவான் அணுகியதால் அப்போதைக்கு மட்டுமல்லாமல் பிற்காலத்திலும் பழங்குடி மக்கள்மூலமாக வர முடிந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி அவர் வைத்துவிட்டார்.

அதேபோல, பழங்குடியினரும் மேயரிடம் தங்கள் பிரச்சினையை விளக்குவதை மறுத்துவிட்டு, பழைய விரோதங்களுக்கும் தாம் அடைந்த நஷ்டங்களுக்கும்பழிதீர்ப்பதைநினைத்துக் கொண்டிருந்தால், தொடர்ந்து சண்டை அவலங்களைச் சந்தித்துக் கொண்டிருப்பார்களே தவிர, பிரச்சினையைத் தீர்த்திருக்க மாட்டார்கள்.


எதிர்ப்பவர்கள் எல்லாம் எதிரிகள் அல்ல. பல சமயங்களிலும் எதிர்ப்பிற்கு வலுவான நியாயமான காரணங்கள் இருக்கக் கூடும். அதை அலட்சியம் செய்வது யாருக்கும் நல்லதல்ல. உண்மையைக் காண மறுப்பதும்,ஒரு சூழ்நிலை பிரச்சினையாக மாற அனுமதிப்பதும் முட்டாள்தனம். சிறியதாக இருக்கையில் கையால் கிள்ளி விடுவதை விட்டு விட்டு மரமாக அனுமதித்துப் பின் கஷ்டப்பட்டு கோடாரியால் வெட்டி வீழ்த்துவது அறிவுடமையும் அல்ல, இனிமையானதுமல்ல.

சிந்தித்துப் புரிந்து கொள்வதற்குப் பதிலாக கோபித்துக் கொதித்தெழுவது எந்தப் பிரச்சினையையும் வளர்த்திக்கொண்டே போகுமேஒழிய தீர்த்து வைக்காது. எந்தப் பிரச்சினையிலுமே அதன் மூல காரணத்தைத் தெரிந்து கொள்வதும், அதைச் சரி செய்யத் தேவையானதைத் தயக்கமில்லாமல் செய்யத் துணிவதுமே மிக முக்கியம். வேரை அழிக்காமல் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தால் திரும்பத் திரும்ப அதை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

அதே போல சில பிரச்சினைகளை சுற்றி வளைத்து அணுகாமல் நேரடியாக அணுகினால் அவற்றை சீக்கிரமாகவே தீர்த்து வைக்க முடியும். ஆனால் பிரச்சினைகளால் அதிகம் பாடுபடுவர்கள், பிரச்சினைகளிலேயே மூழ்கிக் கொண்டிருப்பவர்கள் பிரச்சினையே அவர்களிடம் இந்த நேரடி அணுகுமுறை இல்லாதிருப்பது தான்.

அவர்கள் எதையும் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகப்பேசித்தெரிந்து கொள்ளவோ, தெரிவிக்கவோ மாட்டார்கள். இரண்டாம் மனிதர்,மூன்றாம் மனிதர் மூலமாகவே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படும்எப்போதுமே சுற்றி வளைத்துப் போகும் கருத்துக்கள் உள்ளது போலவே போய்ச்சேர்வதில்லை. அந்த இரண்டாம் மனிதர், மூன்றாம் மனிதர் நேர்மையானவராகவும், நல்ல எண்ணம் கொண்டவராகவும் இல்லாவிட்டாலோ அது கண்டிப்பாக பிரச்சினைகள் இன்னும் பெரிதாக்குவதாகவே இருக்கும்.

எனவே பிரச்சினைகளை கோன் யுவான் போல அணுகினால், பிரச்சினைகள் தீர்வது மட்டுமல்ல அவை அனுகூலமாக மாறவும் கூடும். ■



# சர்வதேச நியமங்களுக்கு ஏற்பவே இலங்கையில் படைப்பரம்பல் உள்ளது

## பிரிகேடியர் ருவான் வணிக சூரிய கூறுகிறார்

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளின் பரம பல் சர்வதேச நியமங்களுக்கு ஏற்பவே உள்ளது எனவும், நாட்டின் பாதுகாப்பு நலன்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நோகங்களை அடைவதற்கு ஏற்பவுமே இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடிய ருவான் வனிக சூரிய கூறியுள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்கிலும் படையினரின் பிரசன்னமானது நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள நிலையை ஒத்திருக்க வேண்டும் என பிரித்தானிய உயர் ஸ்தானிகர் கூறியமைக்கு பதிலளிக்கும் முகமாகவே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான படையினர் அகற்றப்பட்டு ஏனைய மாகாணங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நாம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல் முழுமையாக நீங்கவில்லை. ஈழப் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரல் இன்னும் உயிர்ப்புடன் உள்ளது. செய்தி ஊடகங்களில் இது மிக வெளிப்படையாக உள்ளது. தமது தேவைகளுக்குப் பொருத்தமெனில் ஆயுத மோதலை ஏற்படுத்துவதற்கு, மேலதிகமாக செயற்படத் தயங்காத பல சக்திகள் உள்ளன என அவர் கூறினார்.

எமது நாடு எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இராணுவம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்தபின் ஆயுதப் படையினர் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர். இன்று வடக்கு கிழக்கில் மாத்திரமல லாமல் தெற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்தி, மேற்கு, வடமேற்கு மாகாணங்களிலும் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

நாடு முழுவதும் சிவில் நிர்வாகம் சிறப்பாக நிலைநாட்டப் பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கில் சிவில் அதிகாரிகள் கோரினால் தவிர படையினர் எந்த பாத்திரத்தையும் வகிப்பதில்லை.

நாம் சுதந்திரம் பெற்ற காலத்தில் பிரித்தானிய ஆயுத படைகளிடமிருந்து இராணுவ பாரம்பரியங்களையும் தொழிற்சார் அடிப்படைகளையும் பெற்றுக் கொண்டோம். எமது இராணுவக் கோட்பாடானது, பிரிட்டனின் ஏனைய முன்னாள் காலனித்துவ நாடுகளிலுள்ளதைப் போன்று பிரித்தானிய இராணுவக் கோட்பாட்டின் அடிப்படையிலானவையாகும் என அவர் கூறினார்.

# பணிப்புறக்கணிப்புக்கு இனித் தடையில்லை

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு சேவைப் புறக்கணிப்பினை மேற்கொள்வதற்காக விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு நேற்று நீக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த தடை உத்தரவை அகற்றியுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவரினால், இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு அமையவே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசியல் யாப்பிற்கு அமைய, பணிப்புறக்கணிப்பு போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமக்கு உரித்து உள்ளது. அதன் அடிப்படையில், தடை உத்தரவினை விலக்கும்படி, மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பாக நீதி மன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த தடை உத்தரவினை தற்போது நீக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொன்சேகாவுக்கு தெய்வ ஆசிவேண்டி....



# நான் எவரையும் பழிவாங்க மாட்டேன்



(கொழும்பு)

கடந்த இரண்டரை வருடங்களாக தன்னை மோசமாக நடத்தியவர்களுக்கெதிராகத் தான் எந்தவிதமான பழிக்குப்பழி வாங்குதல்களையும் செய்யப் போவதில்லையென முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.

நான் அவர்களுக்கெதிராகவோ அவர்கள் எனக்கெதிராகச் செய்த நடவடிக்கைகளுக்கெதிராகவோ பழிவாங்கப் போவதில்லை. அவர்கள் நல்லதொரு நாட்டின் நலனைக் காப்பவர்களாகச் செயற்படுவார்களென்றே தான் அவர்களை எதிர்பார்த்தேன். எனினும் அதற்குப் பதிலாக அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தையும் தமக்குக் கிடைத்த அதிகாரத்தினையும் சாதகமாகப் பயன்படுத்தியிருந்தனர். இதற்காக நான் அவர்களையிட்டுக் கவலைப்படுகின்றேன் என்றார்.

ஜனாதிபதியின் சட்டத்தின்கீழ் அரசகூட்டமைப்பின் உறுப்பினர்களால் தமது எதிர்க்கருத்துகளைக் கூற முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். அவர்கள்தான் என்னைவிடவும் மிகமோசமான சிறைச்சாலையில் இருக்கின்றார்கள். அவர்களால் கதைக்கமுடியாது. கேட்கமுடியாது. இவ்வாறானவர்களை நீங்கள் எப்படியும் வகைப்படுத்தலாம் என்றார்.

அத்துடன் அரசிலும் அரச கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையிலும் விரிசல்கள் காணப்படுவதாகவும் அது விரைவில் ஜனாதிபதியையும் அவர் தனது குடும்பத்தினரைச் சுற்றி அமைத்த அதிகார அச்சினையும் தூக்கியெறியும் என்றும் குறிப்பிட்டார்.

பொன்சேகாவின் வாலைப் பிடித்துக்கொண்டு பல எதிர்க் கட்சிகள் செல்கின்றன என்று அரசினால் வெளியிடப்பட்ட கருததிற்குப் பதிலளிக்கையில் அவர் அரசும் முன்பு இவ்வாறுதான் தான் நல்லது செய்தபோது தன்பின்னால் நின்று அந்த அனுகூலத்தினைப் பெற்றதென்றும் குறிப்பிட்டார்.

மற்றவர்கள் எனது விளக்கின்கீழ் நின்று வெளிச்சம் பெறுகின்றார்களென அரசு கூறுகின்றது. ஆனால் உண்மையென்னவெனில் நான் இராணுவக் கட்டளையதிகாரியாக இருந்த வேளையில் அவர்களுந்தான் எனது விளக்கின்கீழ் இருந்தவர்கள்.

இன்றைக்குக்கூட நான் எனக்காக ஒளிரவில்லை. நாட்டு மக்களுக்காகவே ஒளிர்கின்றேன். இந்த வெளிச்சத்திற்குள் எவரும் ஏன் அரசுங்கூட வந்து நிற்கலாம் என்றார்.

# மாணவர்களிடம் பணம் அறவீடு அரச பாடசாலைகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போது அன்பளிப்பு என்ற ரீதியில் பணம் பெற்றுக்கொள்வது போன்று, கல்விப் பொதுத்தராதர உயர்தர தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போது பணம் பெற்றுக்கொள்ளப்படுவதாக அரச பாடசாலைகள் மீது குற்றச்சாட்டு தெரிவிககப்படுகிறது.

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போது சேவை கட்டணம் மற்றும் வசதி கட்டணம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக, உதவி என்ற ரீதியில் பணமாகவோ, பொருளாகவோ சேவை என்ற வகையிலோ அல்லது வேறு விதங்களாகவோ பணம் பெற்றுக் கொள்ள முடியாது. இது எந்த வகுப்பில் மாணவர்களை பாடசாலைகளுக்குச் சேர்க்கும் போதும் பொருந்தும்.

ஆனால், அநேக பாடசாலைகள் அன்பளிப்பு என்ற ரீதியில் பெருந்தொகை பணத்தை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினூடாக பெற்றுக்கொள்கின்றன. ஆனாலும் பெரும்பாலான பாடசாலைகள் அதற்கான பறறுச் சீட்டை வழங்குவதில்லை. சட்டச் சிக்கலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக சில பாடசாலைகள் பிள்ளைகள் சேர்க்கப்பட்டு பின்னர் வரும் திகதியொன்றில் திகதி குறிப்பிட்டு அன்பளிப்பாக பணம்பெற்றுக் கொண்டதற்கான ரசீதை வழங்குகின்றன.

அன்பளிப்பு கோருவது எழுத்து மூலமாக அல்லாமல் வாய்மொழி மூலமாவே இடம்பெறுகின்றன. இதற்குக் காரணம் சட்ட ரீதியான முறையில் அன்பளிப்பாக பணம் மற்றும் பொருட்களைக் கேட்க முடியாமையேயாகும்.

இதேவேளை, பிரபல பாடசாலைகள் உட்பட பாடசாலைகள் பல கல்விப்பொதுத்தராதர உயர்தர தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போது, பிற பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுவது போன்று, தமது பாடசாலை மாணவர்களிடமும் வசதிகள் சேவைகள் கட்டணங்களுக்கு மேலதிகமாக அன்பளிப்பு என்ற ரீதியில் பணத்தைப் பெற்றுக்கொள்கின்றன என்று பரவலாக குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

# கியூபாத் தூதுவர் பதவி குறித்து தமராவிடமிருந்து பதில் இல்லை

(கொழும்பு)



வெளிவிவகார அமைச்சு வழங்க முன்வந்த கியூபாவுக்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம், அப் பதவியை இன்னும் ஏற்றுக்கொள்வோ அல்லது நிராகரிக்கவோ இல்லை எனத் தெரியவருகிறது.

திருமதி தமரா குணநாயகத்தின் புதிய சுயவிபரக்கோவையை கோரிய வெளிவிவகார அமைச்சு இதற்கான பதிலை எதிர்பார்த்து காத்திருக்கிறது. அவருக்கு இரு வாய்ப்புகள் உள்ளன. அமைச்சினால் வழங்கப்பட்ட பதவியை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அது அவரைப் பொறுத்த விடயம். ஆனால் அமைச்சு ஏற்கெனவே மேற கொண்ட தீர்மானத்தின்படி செயற்படும். அதில் மாற்றமில்லை என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தண்டனை நிலையத்திற்கு தான் இடமாற்றப்படுவதற்கு அதிருப்தி தெரிவித்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு கடந்த முதலாம் திகதி தமரா குணநாயகம் கடிதமொன்றை எழுதியிரந்தார். ஜெனீவாவில் ஐ.நா.வுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக தான் ஏன் தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும் என்பதை அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவராக பதவி வகித்த ரவிநாத் ஆரியசிங்க, ஜெனீவாவில் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியாக ஜுலை முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

# கனடாவுக்கு ஆட்கடத்தல் சிக்கித்தவிக்கும் இலங்கையர்

(கொழும்பு)

கானா போன்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளில் சந்தேகத்துக்கு இடமாக தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கானாவில் இருந்து கனடாவுக்கு மீன்பிடி படகு ஒன்றின் மூலம் தப்பிச் செல்ல முற்பட்ட ஆறு இலங்கையர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்த நோக்கத்துடன் மேலும் பல இலங்கையர்கள் கானா உள்ளிட்ட மேற்கு ஆபிரிக்க நாடுகளில் தங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, மேற்கு ஆபிரிக்க நாடான கானாவில் அண்மையில் கைது செய்யப்பட்டு தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மையப்படுத்தி, ஆட கடத்தல் நடவடிக்கை ஒனறு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர்களை கனடாவுக்கு அழைத்து செல்வதாகக் கூறி, குறிப்பிட்ட சில ஆட்கடத்தல் குழுக்கள் அவர்களை டோகோவில் அநாதரவாக கைவிட்டுச் சென்றுள்ளது. இது தொடர்பில் சிலர் கைது செய்யப் பட்டும் உள்ளனர்.

இந்த நிலையில் டோகோ முகாம்களில் உள்ள 200இற்கும் மேற்பட்ட இலங்கையர்களை மீண்டும் கனடாவுக்கு அழைத்துச் செல்லும் வகையில், சில உள்நாட்டு மீனவர்கள் மற்றும் ஆட்கடத்தல்காரர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை உள்நாட்டு புலனாய்வுத் துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்த அகதிகள் குழுவில் இருந்து சிலர் மீண்டும் இலங்கைக்கு திரும்பி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# உலகளாவிய செய்தியை தமிழ் தீவிரவாத தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்!

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரையும், தமிழ் நாட்டில் உள்ள ஆதரவாளர் களையும் தவிர்த்து நோக்கினால் வேறு எவருக்கும் விடுதலைப் புலிக-ளின் அழிவு ஒரு விடயமல்ல. உலகத்தைப் பொறுத்தவரையில் தங்களது பயங்கரவாத பட்டியலில் இடம்பெற்றிருந்த ஒரு மிக முக்கியமான அமைப்பு இல்லாமல் போய்விட்டது.

இலங்கைக்கான ஐ.நாவின் பேச்சாளராக இருந்த, கோர்டன் வைசின் வார்த்தையில் சொல்வதானால் சந்தேகம் இல்லாமல் புலிகள் இல்லாத உலகம் மிகவும் சிறப்பாக இருக்கின்றது. [Undoubtedly, the world is a better place without the Tamil Tigers] இவ்வளவுதான் உலகத்தின் பார்வையில் புலிகளுக்கு இருக்கும் முக்கியத்துவம்.

ஆனால் உலகம் இத்தகையதொரு முடிவுக்கு வருவதற்கு முன்னர் விடுதலைப்புலிகளுக்கு பல வாய்ப் புக்களையும், மறைமுக



செய்திகளையும் வழங்கியிருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அத்தகைய செய்திகளையும் வாய்ப்புக்களையும் பிரபாகரன் பொருட்படுத்தியிருக்க வில்லை. விளைவு, அவரது முடிவு அவராலேயே தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அதற்காக தமிழ் சமூகம் கொடுத்த விலை அளவிட முடியாதது. உலகம் பற்றிய தெளிவான பார்வை இருந்திருக்குமானால், இத்தகைய தொரு முடிவு தவிர்த்திருக்க முடியாத ஒன்றாக இருந்திருக்காது. அதனை நாம் இந்த சந்தர்ப்பத்திலாவது விளங்கிக் கொள்ள முயற்சிக்கலாம்.

உண்மையில் 2002இல் பிரபாகரன் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட துடன், அவரது ஆயுதப் போராட்டம் முடிவடைந்துவிட்டது. ஆனால் அதன் பிறகு அவர் செய்தது எல்லாம், அவரால் கட்டியெழுப்பப்பட்ட இயக்கத்தை அவரது காலத்திலேயே அழிப்பதற்கான ஏற்பாடுகள்தான்.

இன்று பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிவுற்று மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது தமிழர்களின் முன் முற்றிலும் புதிய தொரு அரசியல் சூழல் விரிந்து கிடக்கின்றது. இது முற்றிலும் கடந்த கால நம்பிக்கைகளுக்கும் அணுகுமுறை களுக்கும் எதிரான சூழல் ஆகும். மே -18 என்பது இன்றைய புதிய சூழலை கையாளுவதற்கான ஒரு நடுகல் சாட்சி மட்டுமே.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை இந்தக் கட்டுரை நினைவு படுத்த முயல்கிறது. சாதாரணமாக பார்த்தால் இது, சில சம்பவங்களின் நினைவுபடுத் தல் ஆனால் ஆழ்ந்து நோக்கினால் இது ஒரு தாண்டிச் செல்ல முடியாத அரசியல் உண்மை. இலங்கையில் ஜே.வி.பி 1971 மற்றும் 1989இல் அரச கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால் இரண்டு தடவைகளும் அதன் தோல்வியில் முற்றுப்பெற்றது. இறுதியில் அதன் தலைவர் விஜயவீர உட்பட அதன் முன்னணி உறுப்பினர்கள் அனைவரும் அழித்தொழிக்கப்பட்டனர்.

1972இல் தோற்றம் பெற்ற தமிழர் ஆயுத விடுதலை இயக்கங்கள் ஒன்று, இரண்டு என விரிவு கொண்டு ஐந்து பிரதான இயங்கங்களாக போராடின.

அன்றைய சூழலில் சிறிதும் பெரிதுமான 32 இயக்கங்கள் இருந்ததாக பதிவுகள் உண்டு. இந்திய ஆதரவுடன் அப்போதைய ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் பல்வேறு தாக்குதல்களில் மேற்படி இயக்கங்கள் ஈடுபட்டன.

இங்கு குறித்துக் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் - இந்தியாவின் நோக்கம் அன்றைய ஜே.ஆர் அரசாங்கத்தை பலவீனப்படுத்துதல் என்பதே அன்றி கவிழ்ப்பதல்ல.


சமீபத்தில் வெளிவந்த கோத்தவின் யுத்தம் [Gota's War] என்னும் நூலிலும் இந்த விடயம் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது - "இந்தியாவின் உதவி இல்லாமால் இருந்திருந்தால், தீவிரவாதத்திற்கு இடம்மாறிய உள்ளூர் அரசியலானது, இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலான ஒரு விடயமாக விரிவு பெற்றிருக்காது".

90ஆம் ஆண்டுகளுக்கு பின்னரான பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்திற்கு மேற்குலகம் மறைமுகமான ஆதரவை வழங்கியிருந்தது. மேற்குலகின் ஆதரவில்லாமல் பிரபாகரனால் இத்தகையதொரு வலுவான இராணுவ கட்டமைப்பை உருவாக்கியிருக்க முடியாது. இங்கு மேற்கின் ஆதரவு என்பது புலிகளின் நடவடிக்கைகளை கண்டும் காணாது விடுதல் என்னும் அடிப்படையில் இருந்தது.

எவ்வாறு இந்தியாவின் ஆதரவு அன்றைய ஜே.ஆர் அரசாங்கத்தை வழிக்கு கொண்டுவருவதற்காக, தங்களால் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர் குழுக்களை பயன்படுத்து வதாக இருந்ததோ, அப்படியே விடுதலைப்புலிகளை கண்டும் காணாது விடுவதன் மூலம் பிரபாகரனின் வளர்ச்சிக்கு மேற்குலகம் உதவியது. இதன் மூலம் தெற்காசிய அரசியலில் தலையீடு செய்வதற்கான ஒரு சூழலை உருவாக்கிக் கொண்டது. புலிகளுக்கு மட்டுமல்ல பல்வேறு ஆயுத அமைப்பு களுக்கும் மேற்குலகு கண்டும் காணாது விடுவதன் மூலம் பல்வேறு வழிகளிலும் உதவி வந்திருக்கிறது.

செப்டம்பர் - 11 வரை மேற்குலம் ஆயுதக் கிளர்ச்சி குழுக்களுக்கு உதவு-வதை ஒரு இராணுவ மூலோபாயமா-கவே கடைப்பிடித்து வந்திருக்கிறது. அத்தகைய நோக்கம் மேற்கிற்கு, குறிப்பாக அமெரிக்காவிற்கு இல்லாதி ருந்தால் இது போன்ற ஆயுத அமைப் புக்களை தனது நாட்டுக்குள் அனுமதித் திருக்காது. ஒருகட்டம் வரை இத்தகைய அமைப்புக்களை குறிப்பிட்ட நாட்டில் ஓரளவு பலம்பெறச் செய்வதற்கு அமெரிக்கா உட்பட்ட மேற்குலகும் ஆதரிக்கின்றது. ஆனால் அந்த ஆதரவிற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக் கட்டுப்பாடு உண்டு. இந்த பின்புலத் தில்தான் புலிகளுக்கு மேற்குலகு கொடுத்த வாயப்புக்களையும் நாம் பார்க்க வேண்டும்.

மேற்குலகும் இலங்கை அரசை கவிழ்க்கும் பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலை ஒரு போதும் அனுமதித்திருக் கவில்லை. இதன் காரணமாகவே



பிரபாரகரனுக்கு மேற்குலகம் ஒரு இறுதி சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது. தான் கண்டும் காணாது விட்டதால் வளர்ச்சியடைந்த பிரபாகரனுக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்துப் பார்த்தது.

இந்த இறுதி சந்தர்ப்பம் என்பது, பிரபாகரன் தனது அரசியல் இலக்கை மறுவரையறை செய்து கொள்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதி வாய்ப்பாகும். இதனை பிறிதொரு வகையில் சொல் வதானால். மேற்குலகம் நோர்வேயின் தலைமையில் பிரபாகரனுக்கு ஒரு இறுதி பரீட்சையை வைத்துப் பார்த்தது. ஆனால் அதில் பிரபாகரன் தேர்ச்சியடை யவில்லை. அதன் பெறுபேறே மே-18.

இலங்கையில் ஜே.வி.பியால் மேற் கொள்ளப்பட்ட, மற்றும் பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட அரச கவிழ்ப்பு முயற்சிகள் அனைத்தும் படுமோசமாக தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை அரசியலில் இது ஒரு முக்கிய படிப்பினையாகும்.

நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் - இலங் கையில் ஆயுதரீதியான செயற்பாடுகள் ஒரு போதுமே வெற்றியளிக்காது. இது தமிழர்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தும். இது இலங்கைக்கு மட்டுமல்ல உலகின் பல பகுதிகளிலும் ஆயுதங்களை நம்பி அரசியல் செய்யும் விடுதலை விரும்பிகளுக்கும், அரச எதிர்ப்பு குழுக்களுக்கும் பொருந்தும்.

விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியை அடையாளப்படுத்தும் மே-18 என்பது, தீவிரவாதம் எந்தவிதமான தடுமாற்ற மும் இன்றி அழித்தொழிக்கப்படும் என்பதற்கான ஒரு உலகளாவிய செய்தியாகும்.

# பிராந்தியக் கெட்ட வார்த்தை!

- சு.முத்து -

தகவல் தொழில்நுட்பத் துறையில், தனித்தனி அதிர்வெண் அல்லது அலைநீளக் கதிர் அலைகள். தகவல் தொடர்பிற்கான வானலைக் கற்றை ஒதுக்கீடு, பயன்பாடு ஆகிய பணிகளை ஒருங்கிணைப்பது இன்டர்நாஷனல் டெலிகொம்யூனிகேஷன் யூனியன் நிறுவனம்.

அந்த சர்வதேச தொலைத்தகவல் தொடர்பு ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் 1969 மே 17 அன்று நிறுவப்பட்டது. அதனால், ஆண்டுதோறும் மே 17 "உலகத் தொலைத்தகவல் தொடர்பு மற்றும் தகவல் கழக தினம்" ஆகக் கொண்டாடப்படுகிறது. இணையம் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களால் சமுதாயமும் பொருளாதாரமும் உயரும் என்பதை வலியுறுத்தும் நாள்.

இந்த சர்வதேசத் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தலைமைச் செயலகமும் ஜெனீவாவில்தான் இயங்கி வருகிறது.

நவீன இயற்பியல் அகராதியில் இன்னொரு பிராந்தியக் கெட்ட வார்த்தை - ரேடியேஷன். குருவிக் குளம் முதல் கூடங்குளம் வரை அனை-வராலும் சகட்டுமேனிக்கு உச்சரிக்கப்படுகிறதே. சில நேரங்களில் சில மனிதர்களுக்குக் குறைந்த அளவு கதிர்வீச்சு நல்லது. புற்றுநோய்ச் சிகிச்சையிலும் ரேடியேஷன் மருந்தாகிறது.

ஆய்வு ஒன்றின்படி, அளவான கதிர்வீச்சினை உள்வாங்கிய நூற்றுக்கு 84 பேர் 12 ஆண்டுகள் ஆயுள் அதிகரித்தது. கதிர்வீச்சு ஏற்காதவர்கள் பாதிப் பேருக்கு ஆயுள் 9 ஆண்டுகள்தாம் கூடுமாம். அதனால் அளவோடு கதிர்வீச்சு ஏற்பது உயர்ச்சி.

1896-ஆம் ஆண்டு யுரேனைல் சல்:. பேட் உப்பில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சினை பெக்குரேல் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி கண்டுபிடித்தார். அந்த பெக்குரேல் கதிர்களுக்கு கியூரி அம்மையார் "ரேடியேஷன்" என்ற கலைச்சொல்லை வழங்கினார். இதற்கென 1903-ஆம் ஆண்டு இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி.



உள்ளபடியே, சூரியனின் கண்ணுக்குப் புலனாகும் கதிர்வீச்சு - ஒளி. சின்னத்திரை, கணினித் திரை எதற்கும் கதிர்வீச்சு உண்டு. இருண்ட பொருளும் வெம்மைக்கு ஏற்ப வெப்பக் கதிர்வீச்சு உமிழும். கைப்பேசியைக் காதோடு காதாக ஒரு கையால் பொத்தி, மறு கையால் வாய் வழி பருகுவதுபோலப் பேசுகி றோம், பேசிக்கொண்டே இருக்கிறோமே, அப்போது நம் கபாலத்தில் புகுவதும் ரேடியேஷனே.

தவறான உணவுப் பழக்கம், மதுப்பழக்கம், புகைப்பழக்கம், வெயில் புழக்கம் என்றாலும் ஆயுள் குறையத்தான் செய்யும். குடும்பத்தில்கூட ஒருவர்க்கு மட்டும் புற்றுநோய் வருவது ஏன்? கதிர்வீச்சு படுவதற்கு முன்னமேயே அவர் இறந்தால் கதிர்வீச்சு மீது ஏன் வீண்பழி?

மாரிலாந்து மாகாணத்தில் பால்டிமோரில் ஜோன் ஹொக் கின்ஸ் பல் கலைக் கழகத் தினர் மீன்பிடி இனத்தவரில் 52 ஆண்களையும், 77

பெண்களைய
அவர்கள் த
பாதரசம் இ
ஒரு தங்க
எச்சங்கள் ஆ
இருந்ததாம்.
பற்றீரியா
ஆயிற்று
பாதரசம்
பரவாயில்லை
கருவாடு சா
கலந்து இரு
ஜப்பானிய
தகவல். 67
பொருள்களி
டொல்.:.பின்க
காட்டிலும் நா
பாதரசம்
என்று விட
தன்பித்த நோ
தங்கள் மன
ளுக்கு உள்
மாதிரி
கேள்விகள்
முக்கியம் இ
இன்றைய
இப்படித்தான்
நினைக்கிறீர்க

# இயக்குநர் பாலாவும் பழிப்புடை 'கிளிஷே'வும்

- சுரேஷ் கண்ணன் -



இயக்குநர் பாலாவின் கதைகளும் மாந்தர்களும் தொடர்ந்து ஏன் ஒரே மாதிரியான வார்ப்பில் இருக்கிறார்கள் என்று யோசிக்கிறேன். தமிழ் சினிமாவில் யதார்த்தமான சித்தரிப்பு என்பதே அபூர்வமானது என்பதும் மாறாக எல்லாமே அதிலிருந்து விலகி போலித்தனமான அழகியல்தன்மையைத் தொடர்ந்து போற்றிப் பார்ப்பது தமிழ் சினிமாவிற்கு உரித்தான அபத்தங்களில் ஒன்று என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். செத்து பிணமாய்க் கிடக்கும் காட்சியிலும் மருத்துவமனையில் ஆறு மாதமாய் படுத்துக் கிடக்கும் காட்சியிலும் தூங்கி எழுந்த காலை கொட்டாவியிலும் கூட பிளாஸ்டிக் "ஒப்பனை"யை கைவிடாத விநோத உலகம். ரிக்ஷாக்காரனாய், பிச்சைக்காரனாய் இருந்தாலும் ரீபோக் ஷூ போட்டிருக்கும் அதிசயம் அங்குதான் நடக்கும்.

"ஸ்டூடியோ செட்"களிலிருந்து வெளிவந்து அசல் கிராமத்தை காண்பித்தவர் என்று பாரதிராஜாவின் மீது பொதுவான சிலாகிப்பு உண்டு. ஆனால் அவர் கூட அசலான கிராமத்தைக் காண்பிக்க வில்லையோ என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. பச்சை பசேலென்றே வயல்களில் வண்ணத்துப்பூச்சிகள் படபடக்க, தாமரை நீர்க்குளங்களில், வேறு வேலை வெட்டியில்லாத காதலர்கள் "தம்தனதம்தன" என்று தொடர்ந்து காதல் செய்து கொண்டிருப்பதும், அவர்களை தீவட்டிகளைத் தூக்கி துரத்தி வரும் கிராமத்துக் காட்டான்களும் என்பதைத் தவிர பாரதிராஜா என்ன யதார்த்தமாக கிராமத்தை சித்தரித்து விட்டார் என்ற கேள்வி எழுகிறது? நகரத்தில் பிறந்த சத்யஜித்ரேவின் "பதேர் பாஞ்சாலி"க்கு நிகரான ஒரு காட்சியைக் கூட கிராமத்தில் பிறந்த பாரதியின் திரைப்படங்களில் காணக் கிடைக்கவில்லை.

இந்த மிகையான அழகியல் சூழலில் பாலா முன்வைத்த அசலான மனநோயாளி தோற்றமுடைய "சேதுவும்" முரட்டு இளைஞனான "நந்தாவும்" பிதாமகன் "சித்தனும்" (தோற்றத்தில் மாத்திரம். - பாத்திர சித்தரிப்பில் ஒப்புதல் இல்லை) ஓரளவிற்கு ஆறுதலளித்தனர் என்பதை மறுக்க முடியாது.

"இப்ப வர்ற ஹீரோங்கள்லாம் ஏன் அழுக்கா இருக்காங்க. குளிச்சுட்டு வரச் சொல்லுங்க" என்றார் சுஹாசினி, ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில். "கோபுரங்கள் சா[illegible]தில்லை" படம் முழுக்க இது போன்ற தோற்றத்தில் நடித்தவரும் உலக சினிமா பார்வையாளருமான சுஹாசினி, இத்தனை அரைகுறைப் புரிதலுடன் பேசியது ஆச்சரியமாய் இருந்தது. ஆனால் எப்போதுமே அவர் அப்படித்தான் பேசுவார் என்பது அவர் நடத்தும் சினிமா விமர்சன நிகழ்ச்சியை பார்த்த பின்பு புரிந்தது.

அவர் அவ்வாறு பேசியது அவரது மேட்டுக்குடி மனப்பான்மையைத்தான் வெளிப்படுத்துகிறது என்று எழுந்த விமர்சனத்தில் சிறிது உண்மை இருக்கலாம்.

விளிம்புநிலை மனிதர்களை பிரேமின் ஓரத்தில் சில நொடிகளுக்கு மேல் காட்டாத, பொதுப்புத்தியில் படிந்துள்ள அதே சிந்தனைகளுக்குத் தப்பாமல் திரையிலும் சித்தரிக்கிற (வெள்ளையா இருக்கறவன் பொய் சொல்ல மாட்டாண்டா) தமிழ் சினிமாவின் மத்தியில் பாலா செய்து வரும் இந்த நுட்பமான புரட்சி ஒரு-வகையான ஆறுதலைத் தந்தது நிஜம்தான்.

ஆனால் ஏன் அவர் இதையே தனது டெம்ப்ளேட்டாக ஆக்கிக் கொண்டு தொடர்ந்து தனது திரைப்படங்களின் கதை யையும் மாந்தர்களையும் ஒரே மாதிரியாக படைத்துக் கொண்டிருக்கிறார் என்கிற சலிப்பு "அவன் இவன்" புகைப்படங்களை பார்க்கும் போது இயல்பாக ஏற்படுகிறது. இந்த கிம்மிக்ஸில் பால-ாவை மாட்டிக் கொள்ளச் செய்தது எதுவாக இருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன். "வித்தியாசமான இயக்குநர்" என்று வந்து விட்ட பெருமையா, "நான் பாலா படங்களின் ரசிகன்" என்று மணிரத்னமே புகழ்வதில் ஏற்பட்ட கிறுகிறுப்பா, வழக்கமான இயந்திர வாழ்க்கையில் சலிப்புற்றிருக்கும் நடுத்தர வர்க்க பார்வையாளர்களுக்கு பாம்பு - கீரிச் சண்டை மாதிரி அவர்களின் வாழ்க்கையில் அபூர்வமாக சந்திக்கிற அல்லது சந்தித்தே இருக்காத அல்லது சந்திக்க விரும்பாத சூழலை, மனிதர்களைக் காட்டி மிரட்சியை ஏற்படுத்துவதா? இயக்குநர் கே.பாலச்சந்தர் வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்திருந்தாலும் "நடுத்தர வர்க்க" மனிதர்களையே தொடர்ந்து தேர்ந்தெடுத்து அதையொட்டியே காட்சிகளை அமைத்து ஒரு-வகையான கிளிஷேவில் மாட்டி பின்பு நீர்த்துப் போனார். "கிராமத்தை அசலாக காட்டினவர்" என்று சிலாகிக்கப் பட்ட பாரதிராஜாவே சடக்கென்று மாறி அதே "சப்பாணியை" "நகரப் பின்னணியில்" சிகப்பு ரோஜாக்களாக, சைக்கலிஜிக்கல் திரில்லர் படங்களுக்கே உரிய படிமங்களுடன் எடுத்து ஆச்சரியப்படுத்தினார். இன்றும் நான் வியக்கும் விஷயம் அது.

வெவ்வேறு வகையான சூழலை, மனிதர்களை, நிகழ்வுகளை வெவ்வேறு பின்னணியில் அசலாக சித்தரிக்க பாவனை செய்வதே ஒரு திரைஇயக்குனனின் முன்னுள்ள சவால். "ஆர்ட் பிலிம்" என்றழைக்கப்படும் படங்களே ஒரே மாதிரியாக போராகத்தான் இருக்கும் என்று பொதுப் பார்வையார்களிடம் படிந்து போயிருக்கின்ற எண்ணங்களிடமிருந்து சத்யஜித்ரே படங்களும் தப்ப முடியவில்லை. ரேவின் படங்களை பார்த்திருக்காதவர்கள்தான் இந்த குற்றச்சாட்டை சொல்ல



முடியும். அகம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான படங்கள், திரில்லர் படங்கள், குழந்தைகள் படங்கள், சமூகப் பிரச்சினையை ஆராயும் படங்கள் என்று பல்வேறு வகைமைகளில் அவர் முயற்சி செய்திருக்கிறார் என்பது அவரது படங்களை பார்த்திருந்தவர்களுக்கு தெரியும்.

தத்தம் குருகுலத்திலிருந்து வெளிவந்தவர்கள், பெரும்பாலும் தமது குரு இயக்குநர்கள் எடுத்த அதே பாணியிலேயே தங்களின் படங்களையும் உருவாக்குவது பொதுவான வழக்கம், தமிழில் பாரதிராஜா பள்ளி, பாலச்சந்தர் பள்ளி என்று முன்உதாரணங்கள் பல உண்டு. ஷங்கர் வித்தியாசமான இயக்குநர் என்று பொதுவாக அறியப்பட்டாலும் தனது குருவான எஸ்.ஏ. சந்திரசேகர் எடுத்திருந்த "ரொபின்ஹூட்" வகைப் படங்களையே இன்னும் பிரம்மாண்ட மசாலாவாக, பல்வேறு சுவாரசிய மாய்மாலங்களுடன் எடுப்பவர் என்பதை சற்று உன்னிப்பாக கவனித்தால் புரிந்து கொள்ள முடியும். (பாய்ஸ் விதிவிலக்கு). ஹொலிவுட் ஷங்கரான ஸ்பீல்பெர்க்கால் கூட தி கலர் பர்ப்புல், ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் போன்ற ஆப்-பீட் படங்களை எடுக்க முடிந்தது. ஆனால் இன்னமும் ஷங்கரால் தனது முதல் எளிய முயற்சியான "மயிலை" திரையில் கொண்டு வர முடியாதபடியான வணிக கிளிஷே வட்டத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் பாலுமகேந்திரா பள்ளியிலிருந்து வெளி வந்திருந்தாலும் பாலாவால் தன்னுடைய குருவின் பாணியிலிருந்து எளிதில் வெளிவந்து தனக்கென பிரத்தியேகமான ஒரு பாணியை உருவாக்க முடிந்தது. ஆனால், வித்தியாச மேக்கப்பில்தான் செய்தால் கமல்படம் என்று கமல் ஒருவகையான கிளிஷேவில் மாட்டிக் கொண்டிருப்பது போல, அழுக்கான, கோரமான மனிதர்களை மையமாக வைத்து எடுப்பதுதான் பாலாவின் பாணி என்கிற வட்டத்தில் பாலாவும் மாட்டிக் கொண்டு விட்டாரோ என்று தோன்றுகிறது.

---

# அரசு பதில்கள்





**ஒருவருக்கொருவர் சம்பந்தமேயில்லாத நபர்களை ஒப்பீடு செய்து பதிலளிப்பதில் குமுதம் அரசு பதில்கள் பிரபலமானது.** பெரும்பாலும் அதன் நிறுவக ஆசிரியர் எஸ்.ஏ.பி.அண்ணாமலை அவர்களே பதிலளித்திருந்தாலும், காலத்துக்குக் காலம் எழுத்தாளர் சுஜாதா உட்பட வேறு பலரும் அரசு பெயரில் வாசகர் கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கிறார்கள். நாற்பது வருடங்களுக்கு முன்பு வாசகர் ஒருவர், "அரசு என்ற பெயரில் பதிலளிப்பவர் யார்" என்று கேட்டிருந்த கேள்விக்கு, "பதிலளிப்பவர் ஒருவரல்ல மூவர். அண்ணாமலை, ரங்கராஜன், சுந்தரேசன் மூவரினது முதலெழுத்துக்கள் சேர்ந்ததே அரசு" என்று பதிலளிக்கப்பட்டிருந்தது. அண்ணாமலை - ஆசிரியர், ரா.கி.ரங்கராஜன் - குமுதத்தில் மிக நீண்ட காலத்துக்கு இணைஆசிரியரராக இருந்தவர். ஜ.ரா.சுந்தரேசன் - துணை ஆசிரியராக இருந்தார். பாக்கியம் ராமசாமி என்ற பெயரில் சீதாப்பாட்டி கதைகளை எழுதியவர் இவர்தான்.

"இருமலா என்று டாக்டர் கேட்டால் நிருமலா முகமே நினைவுக்கு வருது, அரசு பதில்கள் பக்கத்தைப் புரட்டினால் சரசு பதில்கள் என்றே சத்தியமாய்த் தெரியுது... ஊருக்குப் போயிருக்கும் மனைவியை உடனே அழைத்துவர வேணும்" என்பதுபோல் வரும் ஒரு கவிதையை மேத்தா எழுதியிருக்கிறார். குமுதத்தில் இப்போதும் தொடர்கிற அரசு பதில்களின் சிறப்பு ஒப்பீடுதான். உதாரணத்திற்கு, பல வருடங்கள் முன்பு குமுதம் அரசு பதில்களில், கிருபானந்த வாரியாரையும் ஜெயமாலினியையும் ஒப்புமைப்படுத்திய பதிலினைப் பாருங்கள்:

"திறந்த வயிறு, நிறைந்த நெஞ்சு. மக்கள் மகிழும் வகையில் 'மறை'பொருளை எடுத்துக்காட்டுவதில் திறமை!"

---

பெண்களையும் தேர்ந்தெடுத்து ஆராய்ந்தனர். அவர்கள் தலைமுடியில் இலட்சத்தில் 0.4 பங்கு பாதரசம் இருந்தது. எங்கிருந்து வந்தது?

ஒரு தங்கச் சுரங்கத்தில் வெளிப்பட்ட பாதரச எச்சங்கள் ஆற்று நீர் வழியே கடலில் கலந்து இருந்ததாம். பாதரசம் மீன்களின் உடலுக்குள் பற்றீரியா [illegible]ண்டுதலால் மெதைல் பாதரசம் ஆயிற்று [illegible] ஆபத்தான நச்சு.

பாதரசம் தலைமுடியில் குடியேறினால்கூட பரவாயில்லை. ஒரு மாதத்தில் ஐந்து முறை மீன், கருவாடு சாப்பிடுபவர்கள் தாய்ப்பாலில் பாதரசம் கலந்து இருக்க வாய்ப்பு உள்ளதாம்.

ஜப்பானிய ஆய்விலும் மற்றோர் அதிர்ச்சித் தகவல். 67 சதவிகிதத் திமிங்கல இறைச்சிப் பொருள்களில் பாதரசம் அடங்கி இருக்கிறதாம். டொல்.்.பின்களில் அரசு நிர்ணயித்த அளவைக் காட்டிலும் நான்கு மடங்கு பாதரசம் உள்ளதாம்.

பாதரசம் தானே இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட முடியாது. "ஆட்டிசம்" என்கிற தன்பித்த நோய்க்காரணி இது. அந்த நோயாளிகள் தங்கள் மனம், தங்கள் கற்பனை என்று தங்களுக்கு உள்ளேயே சஞ்சரிப்பவர்கள். முட்டாள்கள் மாதிரி [illegible]டுவார்கள். முழுப் பைத்தியக் கேள்விகள் கேட்பார்கள். விடைகள் அவர்களுக்கு முக்கியம் இல்லை. ஒருவகையில் சுய பித்தர்கள்.

இன்றைய அரசியல்வாதிகளில் பலர் இப்படித்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?

---

# நயனொடு நன்றி புரிக!

- இரா.வி.விஷ்ணு கட்டுரையிலிருந்து.

**தமிழ் தேசியம் என்பது காலா காலமாக எமது தமிழ் சமூகத்தில் பின்னிப்பிணைந்து வந்திருக்கிறது. ஆனால் தமிழ் தேசியத்தை பயன்படுத்துகிற நபர்கள் கால காலமாக மாறுபட்டுக்கொண்டே வருகின்றனர்.**


**ஒன்று அவர்கள் முன்னாள் தமிழ் தேசியவாதிகளாக (தற்போது தமிழ் தேசிய வார்த்தையையே பயன்படுத்தாதவர்கள்) அல்லது இந்நாள் தமிழ் தேசிய வாதிகளாக (முன்னர் தமிழ் தேசிய வார்த்தையையே பயன்படுத்தாதவர்கள்) இருக்கின்றனர். அவர்கள் யாரென்று பட்டியலிட்டால் வாசகர்களை ஏதும் தெரியாதவர்கள் என்று நான் இழிவுபடுத்துதல் போலாகிவிடும்.**

**மேதின தேசியக் கொடி விவகாரம் ஆரோக்கியமான சூடான விவாதத்துக்கான களம் ஆகியது. ஆச்சரியமான விடயம் என்னவென்றால் தமிழ் ஊடகங்களுக்கான எமது தலைவர்களின் அறிக்கைகளின்படி இவ்விடயத்தை ஆதரிப்பதற்கும், எதிர்ப்பதற்கும் வலுவான தைரியம் தமிழ் சமூகத்திலும், அரசியல் செயற்பாட்டாளர்களிலும் ஏற்பட்டிருப்பதுதான்.**

**ஐ.நா தீர்மானம் கூறிய விடயங்களுக்கான நிறைவேற்றுக்காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. அமெரிக்காவின் எதிர்பார்ப்புகளுக்குட்பட்ட பொன்சேகாவின் விடுதலை என்பது மட்டுமே இன்றளவில் இராஜதந்திரமாக இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதில் தமிழர்களுக்கான நன்மை என்ன என்று யோசிக்கையில், போரை நடத்திய தலைவன் தான் என்ற தொனியில் பொன்சேகாவின் முதல் நாள் அறிக்கை, பேட்டி வந்துவிட்டது.**

**பலரிடம் இவரால் ஆட்சி மாறலாம் என்கிற நிறைவேறும் அல்லது நிறைவேறா கனவு இருக்கலாம். இதன் மூலம் ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் கூட்டமைப்பு கூட்டுக்கும் தமிழர்க்கும் நன்மை விளையுமெனவும் எதிர்பார்க்கலாம்.**

**இன்றைய எமது பலவீனமான சூழ்நிலையில் (தமிழ் மக்கள், இலங்கை)**




**தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒன்றிணைந்த இலங்கைக்குள்ளேயே தீர்வு வேண்டும் என்று உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் குரல்கொடுத்துவரும் சூழலில், புலம்பெயர் சூழலில் ஒரு சில அமைப்புக்களின் செயற்பாடுகள் முக்கியமாக தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் தங்கள் அரசியல் வங்கு ரோத்துக்களை நிரப்ப தம் கட்சி பதவி சார்ந்து எடுக்கும் தான்தோன்றித்தனமான தீர்மானங்களும் தமிழீழ கோசங்களும் இலங்கை தமிழ் மக்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளாமல் நடப்பதுவே மன வேதனை அளிக்கின்ற விடயமாக இருக்கின்றது.**


**ஐ.நா காலக்கெடு வரையேனும் அமைதி காக்க ஈழக்கோச அமைப்புக் களும் தமிழகத்தில் அரசியல் வங்கு ரோத்துடைய அமைப்புக்களும் முன்வரவேண்டும். அதிகாரமிக்கவர்களின் இராஜதந்திர அழுத்தங்களே இன்றைய சூழ்நிலையில் இலங்கை மக்களுக்கு உதவுமே ஒழிய வெற்றுக்கோசங்களல்ல!**

**"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டும் உலகு"**

**(நீதி வழுவாமல் நன்மைகளை செய்து பிறருக்கு பயன்பட பணியாற்றுபவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.)**

# முன்மாதிரியான நிறுவனமாக வடகடல் நிறுவனத்தை மாற்றுவோம்

## ஒன்றிணைந்து உழைக்க அழைக்கிறார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வடகடல் நிறுவனத்தை முன்மாதிரியான செயற்பாட்டைக் கொண்டதான நிறுவனமாவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம்-குருநகரில் அமையப்பெற்றுள்ள வடகடல் மீன்பிடி வலைத் தொழிற்சாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது தொழிற்சாலையின் உற்பத்திகள், சந்தைவாய்ப்பு, மூலப் பொருட்களின் தட்டுப்பாடு அவற்றைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொண்டு வருகின்ற இடர்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே வடகடல் நிறுவனத்திற்குக் கீழான லுணுவில, வீரவில ஆகிய தென்பகுதி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து குருநகர் வலைத் தொழிற்சாலையை விஸ்தரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதனிடையே பல்வேறு தொழிற் கூடங்களைப் பார்வையிட்ட அமைச்சர் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் 5 நாட்களும் சிரமதான நாட்களாகப் பிரகடனப்படுத்தி தொழிற்சாலையையும் அதன் சுற்றுவளாகத்தையும் சுத்தம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்ததுடன், பாவனைக்குட்படுத்தாத பகுதிகளையும் பயன்படுத்துவது யுத்தத்தால் சேதமடைந்த கட்டடங்களின் புனரமைப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வடகடல் நிறுவனத்தின் கீழ் குருநகர் மீன்பிடி வலைத் தொழிற்சாலையும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உடனிருந்தார்.

# இந்தியத் தூதுவர் கிழக்கு விஜயம்

## காந்தியின் சிலைக்கு மலர் வணக்கம்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்த்தானிகர் அசோக கே.காந்தா நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். இந்திய உயர்ஸ்தானிகரின் இந்த விஜயத்தின் போது மட்டக்களப்பு நகரில் புனரமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலையை பார்வையிட்டு மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர்களைத் தூவி வணக்கம் செலுத்தினார்.

காந்திசேவா சங்கம், மட்டக்களப்பு மாநகர சபை ஏற்பாடு செய்த இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தன் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேயர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் ஜோர்ஜ் பிள்ளை, மாநகர ஆணையாளர் கே.சிவசாதன் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், காந்தி சேவா சங்கத்தின் தலைவர் செல்வேந்திரன் உட்பட முக்கியஸ்த்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் இந்த மகாத்மா காந்தியின் உருவச்சிலை உடைத்து சேதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்திய உயர்ஸ்த்தானிகர் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு வைபவங்களிலும் கலந்து கொண்டார்.

# முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் காத்தான்குடியில் தீக்கிரை




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று மாலை திறக்கப்படவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக காத்தானகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி ஏத்துக்கால் வீதியில் அமைக் கப்பட்டிருந்த இவ் அலுவகம் நேற்றுச் சனிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமினால் திறந்து வைக்கப்பட இருந்த நிலையிலே இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தர் சிலை விற்பனை ஐந்து பேர் கைது



(கொழும்பு)

மஹியங்கணை - கிராந்துருகோட்டை பிரதேசத்தில் பளிங்கு கல்லினாலான புத்தர் சிலையொன்று விற்கப்படவிருந்தபோது பொலிஸ் புலனாய்வு பிரிவு மூலம் மஹியங்கணை பொலிஸரால் கைப்பற்றபட்டது.

இச்சம்பவம் தொடர்பில் 5 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கணைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட புத்தர் சிலை 24 கிலோவும் 400 கிராம் எடை கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று மஹியங்கணை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிபதி குறித்த சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவு பிறப்பித்தார்.

# சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் சரத் பொன்சேகா



## கெஹலிய சீற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலையாகிய சரத்பொன்சேகா வடபகுதியின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடுவதாக தமிழ் பத்திரிகையொன்றுக்கு கூறியிருக்கும் கருத்து வெளிநாடுகளின் தலையீடுகளை அவர் வலியுறுத்துவதைக் காட்டுவதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

அவுஸ்ரேலியாவில் இடம் பெற்ற ஒரு விபத்தினால் காயமடைந்த பின்னர் அங்கு 4 மாத காலம் சிகிச்சை பெற்று இப்போது குணமாகி இருக்கும் வெகுஜன ஊடகத் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த வியாழக்கிழமை இரவு நாடு திரும்பினார். கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பதில் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் செய்தி நிருபர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

சரத் பொன்சேகா பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட கேளவிக்குப் பதில் அளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, ஜனாதிபதி அளித்த மன்னிப்பின் மூலம் சுதந்திரமாக வெளியில் நடமாடிக்கொண்டிருக்கும் சரத் பொன்சேகா தன்னுடைய உண்மை நிலைப்பாட்டை மறந்துவிட்டு, ஜனாதிபதி அளித்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சி செய்கிறார் என்றும் கண்டனம் தெரிவித்தார்.

உள்ளூர் பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்துவதற்கு சரத்பொன்சேகா வெளிநாட்டில் உள்ளவர்களை தலையிடுமாறு அழைத்தது தவறான செயல் என்றும் இப்போது அவர் இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் கைப்பாவையாக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் எம்மத்தியில் எழுந்துள்ளது என்றும் கூறினார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக எடுக்கப்பட்ட முடிவு ஒரு தோல்வி அல்ல என்றும், ராஜதந்திர மட்டத்தில் இவ்விதம் தோல்விகள், வெற்றிகள் மாறி மாறி வரும் என்றும் சொன்னார்.

ஜெனீவா தீர்மானம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் நான் அதற்கு ஏற்புடைய ஒரு நல்ல முடிவை எடுபபேன் என்று தெரிவித்திருக்கும் கருத்தை, அமைச்சரவையில் உள்ள சகல அங்கத்தவர்களும் இந்நாட்டு மக்களும் நம்புகின்றார்கள்.

ஜனாதிபதி செய்த சாதனையை நாம் மறக்க முடியாது. ஒரு தடவையல்ல. இரண்டு தடவையல்ல, மூன்று தடவை ஜனாதிபதி இந்த நாட்டைப் பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றிய மாவீரர் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கருணையினால் இன்று சுதந்திரம் பெற்றிருக்கும் சரத்பொன்சேகா இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கும் கருத்து பற்றித் தான் அபிப்பிராயம் தெரிவிப்பதாயின், இலங்கையில் பேச்சு சுதந்திரம் இருக்கிறது. எவருக்கும் எதையும் பொறுப்பற்ற முறையில் சொல்லலாம்.

ஆனால் இன்று சாதாரண மனிதனாக இருக்கும் சரத் பொன்சேகா சொல்வதை எவரும் பொருட்படுத்தமாட்டார்கள் என்றும கெஹலிய ரம்புக்வெல்ல ஊடகவியலாளர்களுக்கு கூறினார்.

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு

இலங்கை தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு இன்று மட்டக்களப்பு ஊறணியில் அமெரிக்க மிசன் மடண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு நடைபெறவிருந்த தேவநாயகம் மண்டபத்தில் தீவிபத்து ஏற்பட்டமையினால் இம் மாநாடு அமெரிக்க மிசன் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் எந்த விதமான மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய கூட்டத்தின்போது புதிய தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், தேசிய மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.


# நீதிமன்றில் பொன்சேகா மீண்டும் ஆஜர்செய்யப்படுவார்



(கொழும்பு)

முப்படைகளின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தபடவுள்ளார். இவர் எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என அவரின் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ சேவையிலிருந்த இராணுவ வீரர்களை சரத் பொன்சேகா தனது சொந்தத் தேவைக்கு பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிற்கு எதிராகவே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



## The gift of the gab | the gift of gab




**Meaning:** If you've got the gift of the gab, or the gift of gab, you have the natural ability to talk in a way that people find entertaining or persuasive.

**For example:**

· All good salespeople have the gift of the gab, so people trust them and believe whatever they say.

· If you want to be a politician, you'll do much better if you were born with the gift of gab.

*Note:* "The gift of the gab" is used more in British and Australian English, while "the gift of gab" is used more in American English.

## twink




**Meaning:** a young man with boyish good looks

**For example:**


· There were a lot of cute twinks at the gay club last night.

· Did you know that straight men call cute young girls "babes", and gay men call cute young guys "twinks"?

*Note:* This word is common among gay men, though it may not be known at all by other people. If it's used outside gay circles, it probably won't be understood.

*Origin:* Possibly derived from a U.S. snack cake called a "Hostess Twinkie" which is "golden-colored, sweet and full of cream", a description which some claim also describes the typical gay image of a "twink".

## burn down





**Meaning:** If something like a building or a forest burns down, it's completely destroyed in a fire.

**For example:**

· **burn down** The church burned down in the fire. There was nothing left but charred wood and ash.

· **burn sth down** The kids said they didn't mean to burn the church down. They were just playing with fireworks nearby.

## Man proposes, God disposes




**Possible interpretation:** Human beings can make any plans they want, but it's God that decides their success or failure.

*Note:* Man (noun) = human beings in general | propose (verb) = suggest; put forward (an idea or plan) | dispose (verb) = decide what happens [mainly poetic] | Also seen as: "Man proposes, but God disposes."

*Origin:* This proverb is a translation from "The Imitation of Christ" by the German-born Thomas ýÿ Kempis (c.1380-1471): "For the resolutions of the just depend rather on the grace of God than on their own wisdom; and in Him they always put their trust, whatever they take in hand. For man proposes, but God disposes; neither is the way of man in his own hands." This may be a reflection of a verse in the Bible (Proverbs 16:9): "A man's heart deviseth his way: but the Lord directeth his steps." Shakespeare, too, had a similar message in "Hamlet" by Hamlet: "There is a divinity that shapes our ends, rough-hew them how we will."

## Good Neighbors



After school one winter day, Jack's mother told him to go out and play in the snow.

"But it's so cold outside, Mother!" Jack said.

"Put on your coat and your hat and your mittens," his mother said. "You can build a snowman before your father comes home."

"I'm going to need a carrot for the nose," Jack said. "And I'll need some things for the snowman's hat and face."

Jack got a bucket and collected everything he needed to decorate his snowman. His mother promised she would watch him build the snowman from the window.

Outside, in his front yard, Jack started with a very small ball of snow. He got on his knees and rolled the snow into a big ball. At another window, someone else was watching Jack play. It was his new neighbour Naoko. Naoko asked her mother if she could go outside and help Jack build his snowman.

"It's very cold outside. Are you sure you want to go out and play?" her mother asked.

"Yes, Mother!" Naoko said. "I will wear my coat and my hat and my mittens."

Naoko's mother helped her put on her winter clothes and promised to watch her from the window.

"You can play until your father comes home," her mother said.

Naoko ran outside to Jack's yard and asked if she could help him finish his snowman.

"Yes, please help me," Jack said. "My father will be home from work very soon."

"Okay. What can I do?" Naoko asked.

"I built my snowman's body with two snowballs. I need to roll one more for my snowman's head."

"But snowmen only have two snowballs. One is for the body and one is for the head, " Naoko said.

"No, snowmen always have three snowballs," Jack said. "I don't think I need you to help me after all."

Jack picked up some snow and made it into a small snowball. He got on his knees and rolled the snow away from Naoko to make the snowman's head.

Naoko walked into her own yard and began to build her own snowman.

"I don't want to build a snowman with Jack anyway," she thought to herself. "I'm going to make my own."

Naoko rolled two big balls of snow and put them on top of each other. When she finished that she took off her hat and scarf and decorated the snowman. Lastly, she found some sticks and pine cones and made her snowman's eyes and mouth and arms. Her mother clapped from the window.

Jack made a hat for his snowman with his bucket. He used his mother's sewing buttons for the eyes and mouth. Lastly, he added a carrot for the snowman's nose. After he finished, Jack's mother smiled and pointed. His father was driving up the street.

Suddenly a terrible thing happened. The head fell off Jack's snowman and crashed to the ground!

"Oh no! My snowman fell apart," Jack said, "and my father is almost home!"

Naoko heard Jack's cry and ran over to his yard to see what the problem was.

"I'll help you roll another snowball," Naoko said. "If we do it together we can finish it before your father gets home."

Together, Jack and Naoko rolled a new snowball. They shaped it with their mittens until it was round. Then they lifted it up onto the snowman's body and decorated it with the carrot and bucket and buttons.

"We finished it just in time," Jack said. "Thank you for your help."


"You're welcome. I like your snowman better," Naoko said. "Mine doesn't have a nose."

Jack walked over to look at Naoko's snowman. He loved the pine cone eyes and mouth and the sticks for arms, but he knew it wasn't finished. Jack ran back to his snowman and pulled the carrot out. He broke it into two pieces and gave half to Naoko.

"Hurry," Jack said. "Your snowman needs a nose and your father is driving up the street too."


"Thank you," Naoko said.

"You're welcome," Jack said. "I think our snowmen make good neighbors."



# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



## Aishwarya Rai Bachchan holds her head high in Cannes following baby weight criticisms




She may have been criticised in her native India for not losing her baby weight fast enough, but Aishwarya Rai Bachchan looked nothing short of dazzling at the AmfAR Cinema Against Aids gala in Cannes this week.

Baby weight or not, the Bollywood actress, 38, lived up to her title of "the world's most beautiful woman" in a gold embroidered sari and co-ordinating tailored jacket with Mandarin collar.

Her hair was piled high on her head and adorned with a slender gold band, while her make-up was understated, save the dark eyeliner around her eyes.

The former Miss World gave birth to her first child, a daughter, in November last year. But an unfortunate recent photograph that captured her with a double chin sparked a flurry of cruel criticism, with some suggesting that she has a "duty" to her fans to regain her pre-pregnancy figure.

One website posted a video of the star looking less than her usual svelte self, flicking between photographs of her pre-birth and photos now. Called "Aishwarya Rai's shocking weight gain," the clip, which came accompanied by elephant sound effects, has been seen more than 500,000 times.

[* File contains invalid data | In-line.JPG *]

Dozens more videos in a similar vein have been posted, each with viewing figures in the tens or hundreds of thousands. Comments left after the video prove that many of those watching have little sympathy for the star.

"She is a Bollywood actress and it is her duty to look good and fit," one said. Another added: "She



needs to learn from people like Victoria Beckham who are back to size zero weeks after their delivery."

Mrs Rai-Bachchan has commendably remained cool-headed about the criticism, and has been open about the fact that she is in no hurry to lose the few extra pounds she gained during her pregnancy.

She has said that she simply wants to "enjoy motherhood."

Indeed, if last night's appearance at Cannes is anything to go by, she has little to worry about. Nor is she short of support in her goal to prioritise her new daughter.

Though there is certainly more critique than praise, many have come out in defence of the star, saying that she, like any new mother, should be focusing on her infant, not her diet.

One wrote: "She is a real women looking after a baby. We should be concern [sic] for her health and happiness especially if she is nursing the baby."

Another said. "Kudos to you Aish for keeping it real and letting your baby have all the bonding and attention she needs with you. Enjoy your life."

Media commentators in India have said that expectations placed on the country's most famous stars are impossibly high.

-Life onlie

## Words and Their Stories: Green Expressions

Green is an important color in nature. It is the color of grass and the leaves on trees. It is also the color of most growing plants. Sometimes, the word **green** means young, fresh and growing. Sometimes, it describes something that is not yet ripe or finished.

For example, a **greenhorn** is someone who has no experience, who is new to a situation. In the fifteenth century, a greenhorn was a young cow or ox whose horns had not yet developed. A century or so later, a greenhorn was a soldier who had not yet had any experience in battle. By the eighteenth century, a greenhorn had the meaning it has today - a person who is new in a job.

About one hundred years ago, greenhorn was a popular expression in the American west. Old-timers used it to describe a man who had just arrived from one of the big cities back east. The greenhorn lacked the skills he would need to live in the hard, rough country.

Someone who has the ability to grow plants well is said to have a **green thumb.** The expression comes from the early nineteen hundreds.

A person with a green thumb seems to have a magic touch that makes plants grow quickly and well. You might say that the woman next door has a green thumb if her garden continues to grow long after your plants have died.


The **Green Revolution** is the name given some years ago to the development of new kinds of rice and other grains. The new plants produced much larger crops. The Green Revolution was the result of hard work by agricultural scientists who had green thumbs.

Green is also the color used to describe the powerful emotion, jealousy. The **green-eyed monster** is not a frightening creature from outer space. It is an expression used about four hundred years ago by British writer William Shakespeare in his play "Othello."

It describes the unpleasant feeling a person has when someone has something he wants. A young man may suffer from the green-eyed monster if his girlfriend begins going out with someone else. Or, that green-eyed monster may affect your friend if you get a pay raise and she does not.

In most places in the world, a green light is a signal to move ahead. A green light on a traffic signal means your car can continue on. In everyday speech, a **green light** means approval to continue with a project.

## From Ancient Farmers, Lessons for Today's Amazon



South America's Amazon is the largest tropical rainforest and river system on Earth. But the Amazon is disappearing at the rate of about eight hundred thousand hectares a year. This deforestation is caused by an increase in agriculture and cattle ranching and the building of roads and dams. Another cause is the illegal cutting of trees for logging companies.

Now, a new study says ancient Amazonian farming methods could offer valuable lessons for today. The study looks at the pre-Columbian period. Christopher Columbus and other European explorers began arriving in the Americas in the late fourteen hundreds.

The researchers studied a coastal wetland area where ancient farm beds and canals remain unchanged. The site is in French Guyana.

A widely held belief is that pre-Columbian farmers used a great deal of fire to manage Amazonian ecosystems. But the scientists say their study calls this idea into question. It shows that raised-field farmers limited their burning to improve agricultural production.

Jose Iriarte from the University of Exeter in England was lead author of the study. Mr. Iriarte says fire results in the loss of important nutrients for crops. When land is not being used for farming, periods without fire are most effective in rebuilding soil organic matter and preserving soil structure. "So in this sense," he says, "we interpreted that they were limiting fires because it was better to grow crops in these raised field systems."


He says this fire-free method by the pre-Columbian farmers helped change the seasonally flooded savanna, or grassland, into productive cropland. Raised fields provide better drainage and soil aeration and also hold moisture during the dry season.

This fire-free method of agriculture would have been labor intensive. It ended when up to ninety-five percent of the native people died from diseases brought by the Europeans. Mitchell Power is curator of the Natural History Museum at the University of Utah.

MITCHELL POWER: "Once the Columbian encounter happens, we don't see that type of agriculture any more. We start to see increased burning and a shift towards dry-land farming. So people were then clearing forests and making their raised beds in the forests. And so, what we think is happening is that there was a huge demographic collapse in this region."

The European colonizers brought slash-and-burn methods of agriculture that remain a threat to the rainforest. Experts say at current rates, more than half of the Amazon's tropical rainforest could be gone by twenty-thirty. The study is in the Proceedings of the National Academy of Sciences.

# 13 பிளஸ் பிரச்சினைக்கு தீர்வாகுமா?



(ஸர்மி, கயந்தா)

எமது நாட்டில் அரசியல் யாப்பு ஆரம்பித்து இம் மாதத்துடன் 40 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துள்ள போதிலும், 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் தமிழ் மக்களுக்கான யாப்புக்களாக அமையவில்லை எனவும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டம் இனப்பிரச்சனைக்குத் தீர்வாகுமா? எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட அரசியல் யாப்பு சம்மந்தமான விளக்கவுரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் அறிமுகவுரையினை பல்கலைக்கழகப் பொருளியல்த துறை விரிவுரையாளர் சிவநாதன் நிகழ்த்தினார்.

13 ஆவது சீர்திருத்தமானது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் .ஜெயவர்த்தன மற்றும் இந்தியா பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோருக்கு இடையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஒன்று எனக் குறிப்பிட்ட அவர், இந்தச் சீர்திருத்தமானது தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையவில்லை. மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வாகவே உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தற்போது முன்வைக்கப்படும் இந்தத் திருத்தத்தில் மேலதிகமாக சேர்க்கும் விடயங்களே சீர்திருத்தமாகும். எனவும், 13 பிளஸ் மூலம் சீர்திருத்தம் என்பது



தமிழர்களுக்கு வெறும் பூச்சாண்டி காட்டுவது போலவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் வறுமையைப் போக்க தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும்

## கிராம சேவகர் வேண்டுகோள்

(கஜந்தா)

பண்டத்தரிப்புப் பிரதேசத்திலுள்ள சங்கானைக் கிராமத்தில் வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துவத்தினைக் கொண்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என கிராமசேவகர் லலிதாம்பாள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தின் J/181 சங்கானை கிராம சேவையாளர் பிரிவில் . மட்டும் 2000க்கும் மேற்பட்டபெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும், இவர்களில்

வறுமை காரணமாக பெண் தலைமைத்துவக் கொண்ட குடும்பங்களே இங்கு அதிகளவில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, வறுமையுடன் வாழும் இந்தக் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும் என கிராமசேவகர் லலிதாம்பாள கேட்டுக்கொண்டுள்ளார்.


# கோடை காலம் கூலாக்க "பப்பாளி"

(ஜெயந்தி)

கோடை காலம் ஆரம்பித்துள்ளதால் மக்கள் ப்பப்பாளிப்பழத்தினை கொள்வனவு செய்கின்றார்கள் என சாவகச்சேரிச் சந்தையில் பழங்கள் விறபனை செய்யும் வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார்.

பொதுவாகவே, மாம்பழம், பலாப்பழம், போன்ற பழங்களை அதிக விலை கொடுத்து வாங்கும் மக்கள் குறைந்த விலையில் விற்கப்படும் பப்பாளிப் பழத்தினை விரும்பி வாங்குவதில்லை. எனினும் தற்போது வெப்பகாலம் ஆரம்பித்துள்ளதால் இவற்றினை மக்கள் ஓரளவுக்கு வாங்கிச் செல்கின்றனர் என அந்த வியாபாரி தெரிவித்தார்.

தற்போது சாவகச்சேரிச் சந்தையில் 1கிலோ 30 ரூபாவிலிருந்து 40 ரூபா வரைககும் விற்கப்படும் பப்பாளிப்பழத்தினை 25 ரூபாவிற்குக் கொள்வனவு செய்வதாக்க் குறிப்பிட்ட நுணாவிலைச் சேர்ந்த விவசாயி ஒருவர்,



சாவகச்சேரியை அண்மித்த பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் பப்பாளிப்பழச் செய்கையில் ஈடுபட்டு வருவதாகவும், சந்தையை விட கிராமங்களிலுள்ள கடைகளில் பப்பாளிப் பழத்திற்கு பெரும் கிராக்கி நிலவுவதாகவும் தெரிவித்தார்.

# இரவல் நகையினை வாங்கி அடைவு வைத்தவரை

## தேடி பொலிஸார் வலைவிரிப்பு

(ஜெயந்தி)

திருமண வைபவத்திற்கு அணிந்து விட்டுத் தருவதாகக் கூறி தாலிக்கொடி மற்றும் சங்கிலி என்பவற்றை இரவலாக வாங்கிச் சென்ற ஒருவர் அவற்றை வங்கியில் அடகு வைத்துப் பணம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயப் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவரும், அவரது கணவரும் மறவன்புலோவில் வசித்துவரும் நண்பரான கச்சான் வியாபாரம் செய்துவரும் கோவிந்தன் என்பவரின் மனைவியிடம் உறவினர் வீட்டில் திருமணம் நடக்க இருப்பதாகக் கூறி 5 பவுண் நிறையுடைய தாலிக்கொடி, மற்றும் மூன்று பவுண் நிறையுடைய சங்கிலி என்பவற்றினைப் வாங்கிச் சென்றுள்ளார்.

மூன்று நாட்களில் தருவதாகக கூறி வாங்கிச் சென்ற பொருட்களை தரவில்லை என நல்லூரடியிலுள்ள நண்பனின் வீட்டில் போய்க் கேட்டபோது அவர்கள் அந்த நகைகளை வங்கியில் அடைவுவைத்து விட்டு அவர்களது பெயரில் இருந்த 5 இலட்சம் பெறுமதியான நகைகளை மீட்டுக்கொண்டு தலைமறைவாகியிருந்தமை தெரிய வந்த்து.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட நபர் நுணாவில் பொலீஸில முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாடு கிடைக்கப்பெற்றதை அடுத்துப் பொலீஸார் சந்தேக நபர்கள் நாட்டைவிட்டுத் தப்பி ஓடாமல் இருப்பதற்காகவும், அவர்களை பொதுமக்கள் அடையாளம் காண்பதற்காகவும், பொலீஸ் நிலையத்தில் அவர்களின் ஒளிப்படங்களை காட்சிப்படுத்தியுள்ளதுடன், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர் என நகை உரிமையாளரான திருமதி நளாயினி கோவிந்தன் குறிப்பிட்டார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

முதல் புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டதோ அன்றுதான் மனிதனின் குரங்கு நிலை முற்றுப் பெற்றது. அவன் குரங்கைத் தோற்கடித்தான். குரங்கு அதை இன்றுவரை மறக்கவில்லை; அதனிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் பாருங்கள் – உடனடியாக அதை நாசம் செய்யும், கிழித்தெறியும், அசிங்கப்படுத்தும். **– எவ்கெனி ஸாமியாடின**

எல்லா நூலகத்திலும் படிக்கப்படாத புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. அவை படிக்கப்படக் கூடாது என்று ஒதுக்கபட்டவையல்ல. படிக்கப்பட வேண்டிய நேரமும் ஆளும் வராமல் காத்திருக்கின்றவை மட்டுமே. நூலகத்தில் அப்படி முப்பது நாற்பது வருடங்களாக ஒருவரும் எடுத்துச் செல்லாத எத்தனையோ புத்தகங்களை நான் எடுத்து வந்திருக்கிறேன். யோசிக்கையில் அந்தப் புத்தகம் அது எழுதப்பட்ட காலதிலிருந்து என் கைக்கு வந்த காலம் வரை எவ்வளவு பெரிய மௌனத்தைக் கொண்டிருக்கிறது. ஏன் அத்தனை புறக்கணிப்பு? அவமானம்? **– எஸ்.ராமகிருஷ்ணன**

தமிழ்ச் சூழல் இலக்கியம் மீது உதாசீனம் உடையது. படிப்பவர்கள் குறைவு. அதில் கூர்ந்து படிப்பவர்கள் மேலும் குறைவு. அவர்களில் சிலர்தான் எதிர்வினையாற்றுகிறார்கள். ஆக, ஒரு படைப்பாளி தன் வாழ்நாள் முழுக்க இருட்டில் புனைகைப்பவனின் நிலையில் இருந்து மடிய நேரிடுகிறது. இச்சூழல் தரும் சோர்வு படைப்பாளிகளை மறையச் செய்வது வியப்பிற்குரியதல்ல. **– ஜெயமோகன்**

படைப்பின் அடிப்படை இயல்பு உணர்ச்சி. ஒட்டுமொத்த மானுட வாழ்வின் உணர்ச்சி அது. ஒரு காட்சியை நம்பகத்தன்மையோடு உருவாக்கி, அதன் பின்னணியில் அந்த உணர்ச்சியைப் படியவைக்கிறார்கள் படைப்பாளிகள். கிட்டத்தட்ட ஒரு கிணற்றைத் தோண்டி, அதில் ஊற்றைச் சுரக்கவைப்பதுபோல. பொருத்தமான ஒரு படிமத்துக்காக வேட்கை கொண்ட விலங்குபோல அவர்கள் மனம் அலைந்தபடியே இருக்கிறது. உணர்ச்சிகளின் அடையாளங்களாகவும் படிமங்களாகவும் படைப்பாளிகள் கண்டறியும் காட்சிகளும் பொருட்களும் எதார்த்தத்தில் நம் பார்வையில் தினம்தினமும் பட்டு நகர்கிறவையாகவே இருக்கக்கூடும். படைப்பாளிகள் அவற்றை தனித்தன்மை மிக்கதாக ஒரே கணத்தில் மாற்றிவிடுகிறார்கள். கல்லிலிருந்து சிற்பத்தைச் செதுக்கி எடுப்பதுபோல. **– பாவண்ணன்**

போருக்குப் பிற்பட்ட ஜெர்மானியக் கவிஞர்களில் தலைசிறந்தவராகக் கருதப்படும் போல் ஸெலான் உணர்ச்சியியல கவிதைகளில் பெரும் சாதனைகளின் உச்சத்தினை எட்டியவர். ஆனால் ஸெலான் தன் கவிதையில் அடைந்த உச்சங்களை எப்படி வாசகன் அடைவது என்பதற்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருள்கோளியல் வழி என்னவென்பது பற்றி எவருக்கும் ஒருமித்த கருத்து நிலவுவதில்லை. வாசகன் எந்த அளவுக்கு ஸெலானை நெருங்குகிறானோ அந்த அளவு ஸெலான் சிக்கலானவராகத் தெரியத் தொடங்குகிறார். **– பிரம்மராஜன்**

ஹெட்மாஸ்டர் சக்கரபாணி ஒரு பேரிலக்கியப் பித்தர். தர்மங்களை மயிரிழை பிசகாமல் பாத்திரங்கள் மூலம் நிறைவேற்றுவதுதான் உன்னத இலக்கியம் என்ற கொள்கைப் பிடிவாதம் அவருடையது. **– பிரமிள் கதை ஒன்றில**

ஒரு படைப்பை விமர்சனம் பண்ணுவது என்பது அந்தப் படைப்பு நம்மை என்ன பண்ணிற்று என்று நம்மையே கேட்டுக் கொள்வதுதான். இந்தப் படைப்பால் இவ்வாறு ஆனேன என்று சொல்லிவிட்டாலே போதும் – அதுவே சிறந்த விமர்சனம். ஏதோ ஒன்று ஒருவனை எழுது என்று தூண்டியிருக்கிறது. அந்தத் தூண்டுதல் மூம் வந்த வெளிப்பாடு உங்களை எப்படித் தூண்டிற்று என்று கேட்டு அதற்கான பதிலைச் சொல்வதுதான் சிறந்த மதிப்பீடு. கால–தேச–வர்த்தமானத்தில் எத்தனையோ வந்துபோகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒருவனிடம் ஏற்பட்ட உணர்வு சரியானபடி சித்தரிக்கப்பட்டு விட்டால், அது எக்காலத்திலும் அதே குணத்தைக் கொண்டிருக்கும். கம்பராமாயணத்தை ரசிப்பது போலவே புதுமைப்பித்தனையும் ரசிக்க முடிகிறது என்றால் அதன் காரணம் மேற்சொன்னதுதான்.

**– மா.அரங்கநாதன்**

எது உனக்கு அறிவுரை சொல்லவில்லையோ
எது உன்னை கட்டாயப்படுத்தவில்லையோ
எது உன்னை உச்சக்குரலில் அழைக்கவில்லையோ
எது உன்னை மன்றாடவில்லையோ
எது உனக்கு விளக்கம் தரவில்லையோ
அதை எதிர்த்து நிற்பது கடினம். **– று.டீ.யீட்ஸ்**

# பெட்ரோல் விலை உயர்வு எதிரொலி தமிழகம் உட்பட 3 மாநிலங்களில் போராட்டம்



இந்தியாவில் பெட்ரோல் விலையின் அதிரடி உயர்வை கண்டித்து தமிழகம் உட்பட உத்திர பிரதேசம், மேற்கு வங்கம், ஒடிசா ஆகிய மாநிலங்கள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளன.

இதன்படி தமிழகத்தில் வருகிற 30ஆம் திகதி முழு அடைப்புக்கு தி.மு.க. அழைப்பு விடுத்துள்ளது.


உத்திர பிரதேச மாநிலத்தில் ஆளும் சமாஜ்வாடி கட்சி சார்பிலும், ஒடிசாவில் ஆளும் பாரதீய ஜனதா தள கட்சி சார்பிலும் 31ஆம் திகதி முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் 26 முதல் 30ஆம் திகதி வரை எதிர்ப்பு போராட்டங்களும் மே 31ஆம் திகதி கண்டன பேரணி நடத்தப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி, பெட்ரோலிய விலையை குறைப்பது குறித்து ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றது.

சர்வதேச சிக்கல்களை கண்காணிக்கும் பொருட்டு பெட்ரோல் விலையை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும். எனவே இன்னும் ஓரிரு திகதிகளில் இதற்கான அறிவிப்புகள் வெளியாகும் என்று கூறியுள்ளார்.

# இமாச்சல எல்லைப்பகுதியில் சீன ஊடுருவல் இல்லை



இமாச்சல பிரதேச எல்லைப் பகுதிகளில் சீனாவின் எந்த விதமான ஊடுருவலும் இல்லை என்று இராணுவ தளபதி வி.கே.சிங் கூறியுள்ளார்.

இமாச்சல பிரதேசம், தர்மசாலாவில் முன்னாள் இராணுவத் தினர் பங்கேற்ற கூட்டம் ஒன்றில் தளபதி வி.கே.சிங் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்பு செய்தியாளர்களை சந்தித்த அவர், இமாச்சல பிரதேசத்தில் சில மாதங்களுக்கு முன்பு சீன நாட்டின் ஹெலிகொப்டர்கள் ஊடுருவியதாக கூறப்படுவதில் உண்மையில்லை என தெரிவித்தார்.

எல்லைப் பகுதிகளில் இராணுவம், மிகுந்த கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. எனவே சீன ஹெலிகப்டர்கள் ஊடுருவ வாய்ப்பே இல்லை என தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

# அசாமில் குண்டு வெடிப்பு


அசாம் மாநிலத்தில் தின்சுகியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார்.

தின்சுகியா மாவட்டம் செலாபரி எனும் பகுதியில் சாலை ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் உள்ளூர் வர்த்தகரான ஏ. அகர்வால் என்பவர் உயிரிழந்தார்.


ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர் சோனியா காந்தி, ஒரு நாள் பயணமாக குவாஹாட்டிக்கு வர உள்ளார். காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளார்.

இந்நிலையில் இங்கு குண்டு வெடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உல்்.பா அமைப்பின் "எதிர்க்குழு" மாநிலத்தில் சோனியா காந்தியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 12 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.




# பா.ஜ.க.வில் இணைகிறார் நடிகை ஜெயப்பிரதா



கொலிவுட், டோலிவுட்டில் நட்சத் திர நடிகையாக இருந்த ஜெயப்பிரதா, பாரதிய ஜனதாக் கட்சியில் இணைகின்றார்.

தொடக்கத்தில் தனது நண்பர் அமர்சிங் மூலம் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார்.

இதன்மூலம் உத்திரபிரதேச மாநிலம் ராம்பூர் தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு ஜெயப்பிரதா தெரிவானார்.

கடந்த ஆண்டு முலாயம் சிங் யாதவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சமாஜ்வாடி கட்சியில் இருந்து அமர்சிங்கும் அவரது ஆதரவாளர்களும் விலகினார்கள். ஜெயப்பிரதாவும் விலகி வெளியே வந்தார்.

இதையடுத்து அமர்சிங் "லோக் மஞ்ச்"என்ற பெயரில் தனிக் கட்சி தொடங்கியதும் அதில் சேர்ந்து பணியாற்றினார். ஆனால் உத்திரபிரதேச சட்டசபை தேர்தலின் போதும் அதன் பிறகும் அமர்சிங் கட்சி செயல்பாடு இல்லாமல் இருந்து வருகிறது.

இந்நிலையில் பாரதீய ஜனதா கட்சியில் சேர நடிகை ஜெயப்பிரதா விருப்பம் தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக கட்சி தலைவர் நிதின் கட்காரிக்கு தூது விட்டார்.

தற்போது அவரை பாரதீய ஜனதாவில் சேர்த்துக்கொள்ள கட்சி மேலிடம் ஒப்புதல் வழங்கி விட்டது. விரைவில் அவர் நிதின் கட்காரியை சந்தித்து பாரதீய ஜனதாவில் முறைப்படி சேருவார் என்று பாரதீய ஜனதா நிர்வாகி ஒருவர் கூறியுள்ளார்.

# வாய்ப்புற்றுநோய்த் தாக்கம்


கேரளாவில் வாய்ப் புற்றுநோய் அதிகரித்துள்ளதையடுத்து குட்கா, பான்மசாலா விற்பனைக்கு தடை விதிக்கப்டுவதாக அம்மாநில முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்துள்ளார்.

இதை மீறி விற்பனை செய்பவர்களுக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை, 5 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்றும் உம்மன் சாண்டி கூறியுள்ளார்.

கடந்த 22ம் திகதி முதல் இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளதாகவும், மாநிலம் முழுவதற்கும் படிப்படியாக நிறைவேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக மாவட்டந்தோறும் சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு அவருக்கு கீழ் பணிபுரிபவர்கள் இதனை கண்காணிக்க உள்ளனர். ஏற்கனவே குட்கா, பான்மசாலா போன்ற பொருட்களுக்கு மத்தியப் பிரதேசம், மகாரார்'டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.க தலைவர் பதவி நிதின் கட்காரிக்கு எதிராக அத்வானி



மும்பையில் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டத்தில் கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் எடியூரப்பா கலந்து கொள்வது உறுதி செய்யப்படாமல் இருந்தது.

இந்நிலையில், தனது முடிவை மாற்றிய எடியூரப்பா ம்ும்பை சென்று செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டார்.


பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் பொறுப்பில் இருக்கும் நிதின் கட்காரி தனக்கு அழைப்பு விடுத்ததாக கூறிய அவர், கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்காரிக்கு நேரில் வாழ்த்து கூற தாம் செல்வதாகவும் கூறினார்.

இதனிடையே, நிதின் கட்காரியின் பதவி நீட்டிப்பில் தனக்கு உடன்பாடு இல்லை என அக்கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கூறியுள்ளார்.

இதன்காரணமாக அத்வானி, பொதுப்பேரணியை புறக்கணிக்கப் போவதாக கூறப்படுகிறது. செயற்குழு கூட்டத்திலும் அவர் மேடையில் அமர்வதை தவிர்த்தார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலையீட்டால்தான் நிதின் கட்காரியின் பதவி நீட்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனிடையே நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜும் பேரணியை புறக்கணிக்கப் போவதாக தகவல் வெளியாகியுள்ளன.

# ஜெகன்மோகன் ரெட்டி கைதானதாக வதந்தி ஐதராபாத்தில் 2 பஸ்கள் எரிப்பு



ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி மீது சி.பி.ஐ. போலீசார் சொத்து குவிப்பு வழக்கு பதிவு செய்தனர். இவ்வழக்கில் கடந்த மார்ச் மாதம் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் 2 நாட்களுக்கு முன்பு ஆந்திர மந்திரி மோபிதேவி வெங்கட்ரமணா கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சொத்து குவிப்பு வழக்கு விசாரணையில் ஆஜராகும்படி ஜெகன்மோகன் ரெட்டிக்கு சி.பி.ஐ. கடிதம் அனுப்பியது. இதையடுத்து அவர் வழக்கு விசாரணைக்காக ஐதராபாத் சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. பொலிசார் 8 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

அப்போது ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தொண்டர்களிடம் ஜெகன்மோகன் ரெட்டி கைதானதாக வதந்தி பரவியது. இதையடுத்து அங்குள்ள வனஸ்தலிபுரம் என்.ஜி.ஓ. காலனியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 அரசு பஸ்களை ஜெகன்மோகன் ரெட்டி ஆதரவாளர்கள் தீவைத்து எரித்தனர். இதில் 2 பஸ்களும் அடியோடு எரிந்து நாசமானது.

தகவல் அறிந்ததும் அப்பகுதியில் அதிரடிப்படை பொலிசார் அதிக அளவில் குவிக்கப்பட்டனர். பின்னர் பதட்டமான பகுதிகளில் பொலிசார் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. ஜெகன்மோகன் ரெட்டி ஆதரவாளர்கள் சில காங்கிரஸ் அலுவலகங்களை அடித்து நொறுக்கினர். இதனால் காங்கிரஸ் கட்சி அலுவலகங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இன்றும் ஜெகன்மோகன் ரெட்டியிடம் சி.பி.ஐ. விசாரணை நடப்பதால் ஐதராபாத்தின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக மோடியை அறிவிக்க வேண்டும்

பாரதிய ஜனதா கட்சி பிரதமர் வேட்பாளராக மோடியை அறிவிக்கவேண்டும். எடியூரப்பா கொரிக்கை.


கர்நாடக முன்னாள் முதல்-மந்திரி எடியூரப்பா மும்பையில் நடந்த பாரதீய ஜனதா செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கு அவர் நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது கூறியதாவது:-

குஜராத் முதல்-மந்திரி நரேந்திரமோடியை பாரதீய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும். மோடி பிரதமராக வேண்டும் என்று இந்த நாடே விரும்புகிறது. இதைத்தான் நான் கூறியுள்ளேன். நான் சொல்வது வேண்டு கோள்தான். இது என் தனிப்பட்ட கருத்தாகும்.

பா.ஜ.க.வில் சில நிகழ்வுகள்தான் எனக்கு கவலையை ஏற்படுத்தியது. மூத்த தலைவர் அத்வானி கர்நாடக முதல்வராக அனந்தகுமாரை தேர்வு செய்ய ஆசைப்பட்டார். அது நடக்கவில்லை.

இதையடுத்து எனக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளனர். கட்சியில் எனக்கு என்ன பதவி தருவார்கள் என்பது பற்றியெல்லாம் நான் ஒரு போதும் கவலைப்பட வில்லை என்றார்.

# மருத்துவரின் தண்டனை எதிரொலி பாகிஸ்தானுக்கான உதவி குறைப்பு



ஒசாமா பின்லேடன் குறித்து தகவல் தந்த மருத்துவருக்கு, பாகிஸ்தானில் 33 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாகிஸ தானுக்கான நிதி உதவியை அமெரிக்கா கணிசமாக குறைத் துள்ளது.


பாகிஸ்தானில் பதுங்கி இருந்த அல்கொய்தா தீவிர வாத தலைவர் ஒசாமா பின்லே டனை அமெரிக்க படைகள் சுட்டுக் கொன்றனர்.

ஒசாமா பற்றி அமெரிக்கா வின் சிஐஏ உளவு அமைப்புக்கு தகவல் தந்ததாக பாகிஸ்தான் மருத்துவர் ஷகீல் அப்ரிடிக்கு 33 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இது சரியல்ல, அவரை மன் னித்து விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி யது. இதை பாகிஸ்தான் ஏற்க வில்லை. இந்நிலையில் பாகிஸ் தானுக்கு வழங்கி வரும் நிதி உதவியை அமெரிக்கா குறைத் துள்ளது.

இதற்கான திருத்த தீர்மா னத்தை குடியரசு கட்சி உறுப் பினர் லிண்ட்சே கிரகாம் கொண்டு வந்தார். அதில், மருத்துவ ருக்கு 33 ஆண்டு சிறை தண் டனை வழங்கப்பட்டுள்ளது. தீவிர வாதத்துக்கு எதிரான நடவடிக்கை யில் பாகிஸ்தான் எந்த பக்கம் இருக்கிறது என்று புரியவில்லை. எனவே மருத்துவர் சிறை தண் டனை அனுபவிக்கும் ஆண்டு வரைக்கும் 33 மில்லியன் டொலர நிதி உதவியை நிறுத்த வேண் டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு 30 உறுப்பினர்கள் கொண்ட நிதியுதவி ஆய்வு குழு ஒருமனதாக ஆதரவு அளித் தனர். இதையடுத்து தீர்மானம் நிறைவேறியது

# 2400 அடி உயரத்தில் இருந்து குதித்து சாதனை



இங்கிலாந்தின் தேம்ஸ் ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள ஹென்லே என்ற இடத்தில் கேரி கானரி(வயது 41) என்ற நபர் ஹெலிகொப்டரில் இருந்து பாராசூட் இல்லாமல் குதித்து சாதனை படைத்துள்ளார்.

குதிக்கும் 'போது இவர், காற்றின் வேகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் விசேஷ உடை அணிந்து இருந்தார். கீழே விழுந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க தரையில் 18,000 அட்டை பெட்டிகளை அடுக்கி வைத்து இருந்தனர்.


ஹெலிகொப்டரில் சென்ற கேரி கானரி மணிக்கு 130 கி.மீ வேகத் தில் பறந்த போது, 2,400 அடி உயரத்தில் இருந்து பாராசூட் இல்லாமல் கீழே குதித்தார். இதன் பின் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அட்டைப் பெட்டிகளில் துல்லியமாக விழுந்ததால், உலக சாதனை படைத்தார்.

இந்த சாதனையை பார்க்க ஏராளமான மக்கள் கூடி இருந்தனர். கேரி கானரி குதித்ததும் அவர்கள் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சாதனையை நேரில் பார்க்க மனைவி விவென்னியும் வந்திருந்தார்.

இதுகுறித்து கேரி கானரி கூறுகையில், ஆகாயத்தில் இருந்து பாராசூட்டில் குதிப்பது என்பது நான் நினைத்துப் பார்க்காத சாதனை. தரையில் குதிக்கும் போது புதுவித அனுபவமாக இருந்தது. எனது கணிப்புகள் துல்லியமாக இருந்தது என்றார்.

இந்த சாதனைக்காக கேரி கானரி சுவிட்சர்லாந்தில் ஒரு வாரம் பாராசூட்டுக்கு பதில் ஸ்விங் சூட் என்ற நவீன ஆடையை பயன்ப டுத்தி மலைகளில் பயிற்சியில் ஈடுபட்டார். ஏற்கனவே இவர் தனது 23 வயதில் பாரிஸ் ஈபிள் டவர், லண்டன் ஐ ஆகிய கட்டடங களில் இருந்து பாராசூட்டில் குதித்து சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொண்டையில் மீன் சிக்கியதால் 14 மணி நேரம் அவதிப்பட்ட சிறுவன்



தொண்டையில் மீன் சிக்கி பல மணிநேரம் சிறு வன் அவதிப் பட்டு துடித்த சம்பவம் மலேசி யாவில் நடந்துள்ளது. அங் குள்ள ஓடை ஒன்றில் பிலிப முயான் (வயது 12) என்ற சிறுவன் தூண்டில் போட்டு 4 சென்ரி மீற்றர் நீளம் கொண்ட மீன் ஒன்றை பிடித்தான்.

அதை தூண்டிலில் இருந்து எடுக்க முயன் றான். அது சரியாக வர வில்லை. எனவே மீனின் தலை பகுதியை தனது வாயில் கவ்விப் பிடித்த படி எடுத்தான்.

அப்போது அந்த மீன் எதிர் பாராதவிதமாக அவனுடைய வாய்க்குள் போய் தொண் டையில் அடைத்தபடி நின்று கொண்டது. மீனை விழுங்க முடியாம லும், வெளியே கக்கி எடுக்கவும் இயலாமல் தவித்தான்.

உடனே அவனை மருத்துவமனையில் அனுமதித்து சத்திர சிகிச்சை செய்து சுமார் 14 மணி நேரத்திற்கு பிறகு மீனை வெளியே எடுத்தனர்.

உலகச் செய்திகள்

# எகிப்தில் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் ஒத்திவைப்பு



எகிப்து நாட்டில் நடந்த ஜனா திபதி தேர்தலின் முடிவுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டை கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த ஹோஸ்னி முபாரக்கை பதவி விலகக் கோரி, மக்கள் தொடர்ந்து போராடியதால், கடந் தாண்டு அவர் பதவி விலகினார்.

இதனைத் தொடர்ந்து அங்கு கடந்த 24ஆம் மற்றும் 25ஆம் திகதி ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தது. ஜனாதிபதி தேர்த லில் 13 வேட்பாளர்கள் போட்டி யிட்டனர். தேர்தல் நியாயமாக நடப் பதை பார்வையிட 350 நீதிபதி களும், 1,500 பார்வையாளர் களும் பணியில் அமர்த்தப்பட்டி ருந்தனர்.

இவர்கள் மட்டுமல்லாது 53 மனித உரிமை அமைப்புகள் சார்பில், 9,457 பார்வையாளர் கள் தேர்தலை கண்காணித்த னர். தேர்தல் பிரசாரம், வாக்குப் பதிவு, வாக்குகள் எண்ணிக்கை ஆகியவற்றை 14 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச பார்வையா ளர்கள் கண்காணித் தனர்.

தேர்தல் முடிந்த தும், வாக்குகள் எண் ணும் பணி தொடங்கி யது. தங்கள் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதாக முஸ்லிம் சகோ தரத்துவ கட்சி அறிவித்துள்ளது.

இந்த கட்சியைச் சேர்ந்த தொண டர்கள் கெய்ரோ நகர சாலை களில் கோஷமிட்டும், கொடி களை அசைத்த படியும் மகிழ்ச் சியை வெளிப்படுத்தினர். இந்த கட்சியின் சார்பில் முகமது முர்சி என்பவர் போட்டியிட்டார் என் பது குறிப்பிடத்தக்கது.

முகமது முர்சிக்கு 26 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள் ளன. முன்னாள் பிரதமரான அகமது ஷபிக் 24 சதவீத வாக்கு களை பெற்றுள்ளார். எனவே, அடுத்த வாரம் மீண்டும் மறு வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு தேர்தல் முடிவுகள் அதிகாரப்பூர் வமாக அறிவிக்கப்பட உள்ளன. எனவே இந்த தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் பெரும் பான்மை கிடைக்காவிட்டால் அடுத்த மாதம், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மறுதேர்தல் நடத்தப்படும்.

# தரை தட்டும் வகையில் பயணித்த கப்பல் இரு ஊழியர்களுக்கு சிறை



நியூசிலாந்தில் தரையை தட்டும் வகையில் பயணித்த சரக்குக் கப்பலின் இரண்டு ஊழி யர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கப்பலின் தளபதி மற்றும் பிரதம மாலுமி ஆகியோருக்கே இவ்வாறு ஏழு மாதகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கப்பலினை தவறாக வழிநடத்தியமை மற்றும் கப்பலின் ஆவ ணங்களில் திருத்தங்களை ஏற்படுத்தியதாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த ஒக்டோபர் மாதம் எம்.வீ ரீனா என்ற கப்பல் தரையை தட்டும் வகையில் பயணித்ததாகவும், எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு, கடல் சூழல் மாசடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட தாகவும், நூற்றுக்கணக்கான கடற் பறவைகள் இறந்ததாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# விசாரணைகளில் ஒத்துழைத்த பின்லேடனின் மனைவியர்



ஒசாமா பின்லேடனின் மனை விமார் விசாரணைகளில், ஒத் துழைப்புடன் செயற்பட்டதாக, விசாரணைகளை மேற்கொண்ட பாகிஸ்தான் புலனாய்வுப் பிரி வினர் குறிப்பிட்டுள்ளனர்.

அபோதாபாத்தில் சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் பாகிஸ் தான் பாதுகாப்புப் பிரிவினரால் பின்லேடனின் மூன்று மனைவி மார் கைதுசெய்யப்பட்டனர்.

ஆரம்பத்தில் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளில் பய னுள்ள தகவல்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை என விசாரணையாளர்கள் தெரி வித்தனர்.

பின்லேடனின் கடைசி மனை வியான ஏமனைச் சேர்ந்த அமல் அல் சதா ஆரம்பத்தில் விசார ணைகளுக்கு ஒத்திழைப்பு வழங் காது, கடுங்கோபத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

ஆனாலும் சவூதியைச் சேர்ந்த முதலாவது மற்றும் இரண்டா வது மனைவிமார் விசாரணை களின்போது,மௌனமாக இருந்த தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் மூன்றாவது மனை வியே இறுதியில் விசாரணைக ளுக்கு போதியளவு ஒத்துழைப்பு வழங்கியதாக பாகிஸதான் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சே குவேரா மற்றும் அவரது நடவடிக்கைகள் மீது அதிக ஆர் வம் கொண்ட அமல், இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி கொள கைகள் தொடர்பில் அதிகம் அறிந்திருந்ததாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

பாகிஸ்தானிற்குள் சட்ட விரோதமாக பிரவேசித்து தங்கி யிருந்த குற்றத்திற்காக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த, பின்லேடனின் மூன்று மனைவி மாரும், 11 பிள்ளைகளும் கடந்த மாதம் சவூதி அரேபியாவிற்கு நாடு கடத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# அகற்றப்படாத படம்



வெள்ளை மாளிகையில் தன்னைப் பார்க்க வந்த கருப்பர் இனத்தைச் சேர்ந்த 5 வயது சிறுவனுக்காக தலை குனிந்துள்ளார் அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா.

வெள்ளை மாளிகையில் வெஸ்ட் விங் பகுதியில் உள்ள அறையில் ஜனாதிபதி தொடர்பான படங்களை வைத்திருப்பார் கள். பழைய படங்களை அவ்வப்போது அகற்றி விட்டு புதிய படங் களை மாற்றுவார்கள். ஆனால் ஒபாமா குணிந்தபடி இருக்கும் இந்தப் படம் மட்டும் கடந்த 3 வருடங்களாக அகற்றப்படாமல் இருக்கிறது.



# கணினி உலா

A.J.Nimalrajan



## USB செயல் வேகம்

புதிதாக ஒரு USB வகையைச் சேர்ந்த Flash Drive வாங்கி இருப்போம். அதன் செயல் வேகத்தை அத்துடன் ஒரு கையேட்டில் குறித்திருப்பார்கள். ஆனால் அது உண்மை தானா?

உண்மையிலேயே ஒரு USB 2.0 வகையைச் சேர்ந்த நினைவகக் கருவியானது (memory device) அதன் செயல்பாட்டை நல்ல முறையில் நடத்துகிறதா?

இந்த மென்பொருட்களை இயக்கும்போது தற்காலிகமாக கோப்புகளை (temp files) எழுதிப் பார்க்கும். அப்படி எழுதிப் பார்க்கும் போது என்ன வேகத்தில் இயங்குகிறது என்பதை திரையில் காண்பிக்கப்படும்.

ஃப்ளர்ஷ ரைவ்களின் வேகத்தை அளவிட 5 மென்பொருட்களை (software applications) இங்கே .

- Check Flash
- HD Speed
- Crystal Disk Mark
- Flash Memory Toolkit
- HD Tune


480Mbps மற்றும், USB 1.1 ஐவிட 40 மடங்கு அதிரிக்கப்பட்ட வேகமாகவும் இயங்குபவை.

## Adobe Photoshop cs6 அறிமுகமானது!

பிரபல மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான Adobe ஆனது Photo editing, Graphic Designing, Animation, Web designing, PDF, Type Setting என பல்வேறு துறை சார்ந்த மென் பொருட்களைத் தயாரித்து வழங்குகிறது.

பொதுவாக இந்நிறுவனத் தயாரிப்புக்கு மாற்றீடான மொன் பொருட்களே இல்லையெனலாம்! அந்த வகையில் Graphic Designing & Photo Editing துறையில் தனித்துவமான மென் பொருளாக விளங்குவது Adobe Photoshop ஆகும்.

இது புகைப்படங்களை மெருகூட்டவும், விளம்பரங்கள்,




அட்டைப்படங்கள், வாழ்த்துமடல்கள் என்பவற்றின் தயாரிப்பி லும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் அனைத்து மக்களா லும் பயன்படுத்தக்கூடிய எளிமைத்தன்மையையும் கொண்டு விளங்குகிறது.

Adobe Photoshop ஆனது Creative Suite வரிசையில் வெளி வரத் தொடங்கிய பின் பயனாளர்களுக்கான வசதிகள் மேம் படுத்தப்பட்டதுடன் பல்வேறு புதிய தொழில்நுட்பரீதியான வசதிகளையும் கொண்டுள்ளது.


இவ்வரிசையில் Adobe Photoshop CS6 இணை Adobe நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது பல புதிய வசதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன.

.Modern user interface
.Mercury Graphics Engine
.New and reengineered design tools
.New Blur Gallery
.All-new Crop tool
.Intuitive video creation
.Preset migration and sharing
.Adaptive Wide Angle
.Background Save
.Auto-recovery
.Improved auto corrections
.Content-Aware Move & etc.

முக்கியமானவை இங்கு தரப்பட்டுள்ளது .

## குப்பைச்செய்தி அனுப்புவதில் முதலிடம்




தேவையற்ற, விரும்பப்படாத, நோக்கமற்ற மெயில்களை ஸ்பேம் என அழைக்கிறோம். அநேகமாக அனைவரின் மெயில் இன்பாக்ஸி லும் இது போல நிறைய ஸ்பேம் மெயில்கள் நிறையக் காணலாம்.

பன்னாட்டளவில் இந்த ஸ்பேம் மெயில்கள் அனுப்புவது பலரின் வழக் கமாக உள்ளது. சில வேளைகளில் இந்த மெயில்கள் கெடுதல் விளை விக்கும் மால்வேர் புரோகிராம்கள் உள்ள தளங்களுக்கும் நம்மை இழுத துச் செல்லும் மெயில்களாக அமைந்து விடுகின்றன.

இந்த ஸ்பேம் மெயில்களை அதிக மாக அனுப்புபவர்களைக் கொண்டு முதல் இடம் பிடித்திருக்கும் நாடு எது தெரியுமா? நம் இந்தியா தான். தகவல் பாதுகாப்பு பிரிவில் இயங்கி வரும் Sophos என்ற நிறுவனம்

இந்த தகவலை அண்மையில் தன் ஆய்விலிருந்து அறிந்து வெளி யிட்டுள்ளது. 2012 மார்ச் வரை இதற கான டேட்டாவினைத் தேடிப் பெற்று இந்த முடிவிற்கு வந்துள்ளது. உலக அளவில் வெளியாகும் 10 ஸ்பேம் மெயில்களில் ஒன்று இந்தியாவிலி ருந்து செல்கிறது. இந்த வகையில் இதுவரை முதல் இடம் பிடித்திருந்த அமெரிக்காவினை முந்திவிட்டது இந்தியா.

இந்த ஸ்பேம் மெயில்கள் பெரும பாலும், ஹேக்கர்கள் தங்கள் மால் வேர் புரோகிராம்கள் மூலம் கைப்பற றிய கம்ப்யூட்டர்களிலிருந்தே அனுப பப்படுகின்றன. இன்டர்நெட் இணைப பினைப் புதியதாகப் பயன்படுத்துப வர்களின் எண்ணிக்கை, அண்மைக் காலமாகப் பெருகி வருகிறது.

ஆனால், இவர்கள் தங்கள் கம்ப் யூட்டர்களைப் பாதுகாக்கும் வழிகளை மேற்கொள்ள மறந்து விடுகின்றனர். விளைவு? மால்வேர் புரோகிராம் களால், இந்த கம்ப்யூட்டர்கள் கைப் பற்றப்பட்டு, இது போல ஸ்பேம் மெயில்கள் நூற்றுக் கணக்கில் அனுப்பப்படுகின்றன.

இந்தியாவில் இயங்கும் இன்டர் நெட் சேவை வழங் கும் நிறுவனங்களும் இந்த வகையில் குறை சொல்லப்பட வேண்டியவையே. இந்த நிறுவனங்களும் அதி தீவிரப் பாதுகாப்பு வழிகளை மேற்கொள்வதில்லை. இதனால் ஸ்பேம் மெயில்கள் பரவ இவையும் காரணமாகின்றன.

பரவும் ஸ்பேம் மெயில்களில் பல பொருளாதார ரீதியாக, குறுக்கு வழிகளில் பணம் கிடைக்கும் என புதியதாக இன்டர்நெட் பயனாளர்களுக்கு வலை வீசு கின்றன. இதற்குப் பலியாகுபவர்களின் யூசர் நேம், பாஸ்வேர்ட் ஆகியவற்றைத் திருடுகின்றன.

இந்த ஸ்பேம் மெயிலை அனுப்புவர்கள், அண்மை யில் பேஸ்புக் மற்றும் ட்விட்டர் தளங்களைப் பயன் படுத்தத் தொடங்கினர். ஆனால் தற்சமயம் இது கட்டுப் படுத்தப் பட்டு விட்டதாகவே தெரிகிறது. தற்போது புதிதாகப் பிரபலமாகி வரும் Pinterest என்னும் சோசி யல் நெட்வொர்க் தளத்தின் மூலமாக ஸ்பேம் மெயில கள் பரவுகின்றன.

இந்த தகவல்கள் அனைத்தும் Sophos நிறுவனத் தின் ஆய்வில் தெரிய வந்துள்ளன.


பல புரோகிராம்களை ஒரே நேரத்தில் திறந்து வைத்து, அடிக்கடி புரோகிராம் மாறி பணியாற்று வோம். எடுத்துக் காட்டாக, வேர்டில் ஒரு பைலையும், பேஜ் மேக்கரில் ஒரு பைலையும், எக்ஸ்புளோரர் விண்டோவினையும் வைத்துக் கொண்டு பணியாற்றுவோம்.

இவற்றில் அடுத்தடுத்துச் செல்ல ஆல்ட் + டேப் உபயோகித்து போல்டருக் கு போல்டர் தாவி பைல் களைக் காப்பி செய்திடுவோம் அல்லது மாற்றுவோம். இதற்கு இன்னொரு வழியும் உள்ளது. உங்கள் விண் டோவினை அதற்கேற்ற வகையில் முதலில் சரி செய்து நிறுத்த வேண்டும்.

எந்த விண்டோக்களில் நீங்கள் செயலாற்ற வேண டுமோ அவை தவிர மற்றவற்றை மினிமைஸ் செய்தி டவும். டூல் பாரில் உள்ள காலி இடத்தில் ரைட் கிளிக செய்து கிடைக்கும் மெனுவில் "Tile Windows Vertically" அல்லது "Tile Windows Horizontally" என்று எதனையாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். அவ்வளவுதான்.

இனி நீங்கள் செயலாற்ற தேர்ந்தெடுத்த விண்டோக் கள் இரண்டும் அருகருகே ஓடு அடுக்கிய மாதிரி நிற்கும். அல்லது படுக்கை வசத்தில் இருக்கும். இரண் டில் உள்ள பைல்களை அப்படியே இழுத்து விடு வதன் மூலம் எளிதாக மாற்றிக் கொள்ளலாம்.

## புக்மார்க்



இன்டர்நெட் உலாவில் புக்மார்க்குகள் முக்கிய இடம் வகிக்கின்றன. நாம் அடிக்கடி செல்லவிரும் பும், முக்கிய தளம் எனக் கருதும் தளங்களுக் கான முகவரிகளைக் குறித்து வைப்பதே புக் மார்க்.

ஒவ்வொரு முறையும், தள முகவரியினை டைப செய்திடாமல், இந்த புக்மார்க்குகளில் கிளிக் செய்து தளத்தினைப் பெறலாம். இவ்வளவு முக்கிய புக் மார்க்குகளைத் தவறுதலாக அழித்துவிட்டால் என்ன செய்வது? திரும்பப் பெறும் வழிகள் எவை? இங்கு பார்க்கலாம்.

குரோம் மற்றும் பயர்பொக்ஸ் பிரவுசர்களில் அழிக்கப்பட்ட, நீக்கப்பட்ட, புக்மார்க்குகளைத் திரும ப்பெறும் வழிகள் தரப்பட்டுள்ளன. குரோம் பிரவு சரில் இது சற்று கடினமான வழியாக அமைககப் பட்டுள்ளது.

பயர்பொக்ஸ் பிரவுசரில் இது மிக எளிது. பயர பொக்ஸ் புக்மார்க் மனேஜர் பிரிவில், அழிக்கப் பட்ட புக்மார்க்கினை உடனடியாக மீட்க ஒரு "undo" வசதி தரப்பட்டுள்ளது. பிரவுசரும் தானாக, குறிப் பிட்ட கால இடைவெளியில் புக்மார்க்குகளை back up செய்கிறது.

இந்த back up பைலைப் பல நாட்கள் பயர் பொக்ஸ் வைத்துக் காக்கிறது. இதனை எப்போது வேண்டுமானாலும், நாம் எளிதாக எடுத்துக் கொள் ளலாம். மறைக்கப்பட்ட போல்டர்களைத் தேடி அலைந்து தோண்டி எடுக்கும் வேலை எல்லாம் இதில் இல்லை.

இதில் உள்ள export ஒப்ஷனைப் பயன்படுத்தி ஏற்கனவே இதன் back upபினை நீங்கள் தயாரித்து வைத்திருந்தால், அவற்றை import செய்து மீண்டும் பெறலாம். ஆனால் இந்த back upபிற்குப் பின்னால் ஏற்படுத்திய புக்மார்க்குகள் கிடைக்காது.

குரோம் பிரவுசர் உங்கள் புக்மார்க் பைலினை ஒரே ஒரு back up பைலாக பராமரிக்கிறது. ஒவ் வொரு முறை குரோம் பிரவுசரை இயக்கும் போதும் அது, அந்த back up பைலை மீண்டும் எழுதிக் கொள்கிறது. எனவே புக்மார்க் பைல் உள்ள போல் டரை அழித்துவிட்டால், குரோம் பிரவுசரை மூடக் கூடாது. மீண்டும் இயக்கக் கூடாது. அப்படி இயக்கி னால், back up பைலில், புக்மார்க்குகள் அழிக்கப் பட்ட நிலையில் எதுவும் திரும்பக் கிடைக்காது. அப படியானால் என்ன செய்யலாம்? இங்கு பார்க்கலாம்.

விண்டோஸ் எக்ஸ்புளோரரைத் திறக்கவும். அதன் அட்ரஸ் பாரில் கீழ்க்காணும் முகவரியை டைப் செய்திடவும். இதில் NAME என்ற இடத்தில், உங களின் விண்டோஸ் யூசர் எக்கவுண்ட் பெயரை எழுதவும்.

C:\Users\NAME\AppData\Local\Google\Chrome\User Data\Default இந்த போல்டரில் இரண்டு புக்மார்க் பைல் இருக்கும். அவை Bookmarks and Bookmarks. bak. இதில் இரண்டாவதாகத் தரப்பட்டுள் ளது (Bookmarks.bak) அண்மைக் காலத்திய back up பைல். நீங்கள் இறுதியாக குரோம் பிரவுசரைத் திறந்த போது, பிரவுசரால் உருவாக்கப்பட்ட back up பைல்.

இந்த போல்டரில் .bak என்ற எக்ஸ்டன்ஷன் பெயருடன் எந்த பைலும் இல்லாமல், Bookmarks என்ற பெயரில் இரண்டு பைல்கள் இருந்தால், பைல் களுக்கான துணைப் பெயர் மறைக்கப்படும் வகை யில் செட் செய்யப்பட்டுள்ளது என்று பொருள்.

இந்தக் குழப்பத்தினை நீக்க, Organize மெனு வில் கிளிக் செய்திடவும். இதில் "Folder and search options." என்ற பிரிவினைத் தேர்ந்தெடுக்க வும். போல்டர் ஆப்ஷன்ஸ் விண்டோவில், View டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு "Hide extensions for known file types" என்ற வரியில் உள்ள பாக்ஸில் டிக் அடையாளத்தை எடுத்து விடவும்.

Bookmarks.bak என்ற பைலை Bookmarks என பெயர் மாற்றம் செய்திடவும். இனி மீண்டும் குரோம பிரவுசரை இயக்கினால், நீங்கள் அழித்த புக்மார்க பைலைக் காணலாம். நீங்கள் இறுதியாக குரோம் பிரவுசரைத் திறந்து இயக்கியபோது உருவாக்கிய புக்மார்க்குகள் மட்டும் அங்கு கிடைக்காது.

# ஆயுள் முழுவதும் ஆட்சி செய்ய துட்டகைமுனுவின் வாளா?

## கேட்கிறார் அநுரகுமார



(கொழும்பு)

தேசிய நூதனசாலையிலிருந்து புராதன வாள்கள் காணாமல் போன சம்பவமானது, புராணக்கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் நம்பும் தலைமைத்துவத்தை நாடு கொண்டுள்ளதன் விளைவாகும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

துட்டகைமுனுவின் வாளை வைத்திருப்பவர் ஆயுள் முழுவதும் ஆட்சி செய்ய முடியும் என புராதன நம்பிக்கை உள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்தகைய 'நம்பிக்கைகள் தான் நூதனசாலையிலிருந்து புராதன வாள்களும் மோதிரங்களும் மர்மமாக காணாமல் போவதற்கு வித்திட்டதாகத் தோன்றுகிறது. மக்களைவிட சோதிட சக்தியை நம்பும் அரசியல் தலைமை உள்ளபோது இவ்வாறு நேரிடுகிறது. அவர்கள் தேடும் வாளை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய பொருட்களையாவது நூதன சாலையிடம் ஒப்படைக்குமாறு நாம் கோருகிறோம் என அநுர குமார திசாநாயக்க கூறினார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் இதேபோன்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

எனினும், ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் மன்னர் ஒருவர் பயன்படுத்திய புராதன சிங்காசனமும் மன்னர் ஒருவரின் முடியும் காணாமல் போயுள் ளதாக கலாசார அமைச்சர் ரி.பி. ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

இப்போது நீங்கள் வாள் காணாமல் போனமை குறித்து பேசுகிறீர்கள். ஆனால், சிங்காசனம் காணாமல் போன அரசியல் வரலாற்றை நாம் கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி இலுப்பைக் கடவையில் சம்பவம்

மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை முதலியார் கமம் கிராமத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சங்கரப்பிள்ளை வரதராஜா (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி நபர் கடந்த 22 ஆம் திகதி காலை தேன் சேகரிப்பதற்காக கல்லானி பாம் எனும் காட்டுப் பகுதிக்கு சென்று அன்றைய தினம் மாலை வீடு திரும்பவில்லை. இந்நிலையில் இவரின் உறவினர்கள் மறுநாள் குறித்த காட்டுப்பகுதிக்குச் சென்று தேடியுள்ளனர்.

ஆனாலும், அன்றைய தினம் அவர் தொடர்பான எவ்வித தகவல்களும் கிடைக்காத நிலையில் பொலிஸாரின் உதவியுடன் குறித்த குடும்பஸ்தரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் உடலில் பல இடங்களில் யானை தாக்கியதினால் ஏற்பட்ட காயங்கள் உள்ளதாக தெரிவித்த இலுப்பைக் கடவை பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடத்தல் சம்பவங்களின் பின்னணி அறிய புலனாய்வுத்துறை நடவடிக்கை ஆரம்பம்

யாழ்.சண்டிலிப்பாயில் சிறுவனைக் கடத்தி முஸ்லிம்மாக மாற்றி காத்தான்குடியில் அடிமையாக வைத்திருந்த சம்பவத்தின் சூத்திரதாரியும், பிரதான சந்தேக நபருமாகியவரைத் தேடிக் கைது செய்வதற்கு புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை ஆரம்பித்திருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.ஈ.எல். பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிரதான சந்தேக நபர் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடியில் தலைமறைவாகியிருப்பதன் காரணமாகவே தன்னை புலனாய்வுத் துறையினர் சந்தேக நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் கடந்த வாரத்தில் சில பாரம்பரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஒன்று சண்டிலிப்பாய் இளைஞன் முஸ்லிமாக மாற்றப்பட்ட சம்பவம் மற்றையது கொடிகாமத்தில் 13 வயதுச் சிறுமியை 19 வயது இளைஞன் பாலியல் வன்புனர்வுக்கு உட்படுத்தியமை இந்தச் சம்பவத்தில் அந்தச் சிறுமியும், இளைஞனும் ஒருவரை ஒருவர் காதலித்துத்தான் இந்தச் சம்பவத்தைப் புரிந்திருக்கின்றனர்.

சிறுமி வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். இளைஞர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருக்கின்றார்.

இதேவேளை, மானிப்பாய் பகுதியில் இரண்டு பாரிய கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் பற்றி புலனாய்வதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் தம்மால் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் கரைநகர்ப் பகுதியில் இரும்பு வியாபாரிகள் இருவரினால் பெண் ஒருவர் பாலியல் வன்புனர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்த அடையாள அணி வகுப்பு ஒன்று எதிர் வரும் முதலாம் திகதி நடைபெறவுள் ளதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் கடந்த 21 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு காரைநகர்ப் பிரதேசத்தில் வீடு ஒன்றிலிருந்து தாலிக்கொடி மற்றும் தங்கச் சங்கிலி என்பன களவு போயிருக்கின்றது. இந்தச் சம்பவத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் குறித்த வீட்டில் களவு போன நகைக்குரியவரின் சகோதரனுடன் குறித்த வீட்டில் தங்கியிருந்த ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும், இவ்வாறான சம்பவங்களே பெரிதாக நடைபெற்றிருப்பதாகவும் யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (பா)

# நகை திருடிய பெண்களுக்கு சிறைத்தண்டனை

நகைத்திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்களுக்கு யாழ்.நீதிமன்றினால் நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த பங்குனி மாதம் 12 ஆம திகதி கொழும்புத்துறை மணியந்தோட்டத்தில் 3 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகளை களவாடியதாக மன்னாரைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மீது யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான வழக்கு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் விசாரணைக்க எடுத்துக் கொள்ளப்பட்டபோது இரண்டு பெண்களும் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து இரண்டு பெண்களுக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடகால சாதாரண சிறைத்தண்டனை விதித்து நீதவான் மா. கணேசராசா தீர்ப்பளித்தார்.

களவாடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (137)

### ஏ-35 வீதியில்...

வாகனத்தின் சாரதி திடீரென வாகனத்தை பின்னால் திருப்பிய வேளை குடும்பஸ்தர் அதற்குள் அகப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். குடும்பஸ்தரின் வீட்டில் இருந்து 100 மீற்றர் தொலைவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதுடன் இவர் முரசுமோட்டையில் சைக்கிள் திருத்தும் தொழிலை செய்து வருபவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கே)

### நீதிக்குப் புறம்பான...

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு, தேவைப்படும் பட்சத்தில் நடவடிக் கைகளை எடுப்போம்.

கனேடியக் குடியுரிமை பெற்ற ஒருவர் அண்மையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் படைத்தரப்பினர் மீது சிலர் குற்றம் சுமத்தியிருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளி. இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதற்கு இது சிறந்ததொரு எடுத்துக்காட்டு என பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மேலும் தெரிவித்துள்ளார் (மற்றுமொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

### தமிழரசுக் கட்சி...

சிரேஷ்ட உப தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா, பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன், பிரதிச் செயலாளர் நாயகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைராசசிங்கம், தொழிற்சங்கச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன், கலாச்சாரச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன், சட்டம் மற்றும் வெளி விவகாரங்களுக்கான செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரும் தெரிவாகினர். இவர்களுடன் 8 மாவட்டங்களுக்குமான உப தலைவர்களும், 12 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுச் சபைக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, நிர்வாகச் செயலாளர் குகநாதன், பொருளாளர் எஸ்.ரி.ஆர்.தியாகராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, சிவஞானம் சிறிதரன், எஸ். சரவணபவன், பா.அரியநேத்திரன், எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனக சபை, துரைரெட்ணசிங்கம், துரைராஜசிங்கம், ஜனாப் கே.எம்.இமாம், கொழும்புக் கிளையின் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா, செயலாளர் சு.வித்தியாதரன் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

### கணவனின்...

உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார் கொலை செய்ததாக தெரிவிக்கப்படும் கணவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (77, கே)

### இளைஞனின்...

சேர்ந்த தனபாலசிங்கம் பதுமசங்கர் (வயது - 24) என்பவருடைய சடலம் என இனம் காணப்பட்டுள்ளது. குறித்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் மதகிற்கு அருகில் வீதியோரத்தில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(116)

### பிரிட்டன்...

அமைச்சு ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்றே வடக்கு, கிழக்கிலும் படையினர் நிலைகொண்டிருக்க வேண்டும் என்றும், ஆனால், மிகப் பெரியளவிலான இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரித்தானியத் தூதுவர் கூறியிருந்தார்.

இவரது இந்தக் கருத்து பிரித்தானியத் தூதரகத்தின் அதிகாரபூர்வ இணையத்தில் இணைக்கப்பட்டுள்ள காணொலி கேள்வி - பதில் நிகழ்ச்சியில் கூறப்பட்டுள்ளது.

பிரித்தானியத் தூதுவரின் இந்தக் கருத்து வெளிவிவகார அமைச்சுக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர், பிரித்தானியத் தூதுவரின் கருத்து கவனமாக ஆராயப்பட்டு வருவதாகவும், அதன் பின்னர், அவர் மீதான பொருத்தமான நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### யாழ். சென்.ஜோன்ஸ்...

ஆனதும் கனகபுரத்தில் இருந்த அம்மன் கோவிலில் உறங்குவோம் எனவும், இப்போது சென்றால் இராணுவம் பரிசோதனை செய்யும் எனவும் சிறுவனிடம் கடத்திய நபர் தெரிவித்துள்ளார். நேற்று அதிகாலை 3.45 மணியளவில் தன்னை எழுப்பி மோட்டார் சைக்கிளிலில் அழைத்து வந்து அதிகாலை 5.30 மணிக்கு நல்லூர் வீதியில் தன்னை விட்டு விட்டு 100 ரூபா பணமும் கொடுத்துவிட்டு பஸ்ஸில் வீடு செல்லுமாறும் தெரிவித்துள்ளார். குறித்த நபர் தன்னைக் கடத்தியத்திற்கான காரணம் தெரியர்து எனவும் சிறுவன் தெரிவித்தான்.

இதேவேளை குறித்த சிறுவன் கடத்தப்பட்டதாக நேற்று முன்தினம் பிற்பகல் யாழ் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்தது. உடனடியாகவே நடவடிக்கையில் இறங்கிய போது பி.அக்ஷய் என்ற கரவெட்டியைச் சேர்ந்த குறித்த மாணவன் முன்னரும் ஒருமுறை வீட்டாருக்கு சொல்லாமல் வேறு பகுதிக்குச் சென்று மீண்டிருப்பது தெரிய வந்தது. அதேபோன்று நேற்று முன்தினமும் பாடசாலைக்குச் செலுத்த வேண்டிய மூவாயிரம் ரூபா பணமும் இருந்திருக்கிறது. அவர் பாடசாலையை முடித்துவிட்டு அங்கிருந்து தனியார் பஸ்வண்டியில் அவரது உறவுக்கார அண்ணனுடன் கிளிநொச்சிக்கு சென்றுள்ளார். இதனை அறியாத பெற்றோர் மகன் காணாமற்போய்விட்டதாக நினைத்து இருக்கின்றனர் தகவல்களும் பரபரப்பாக வெளியாகி இருந்தது.

இருந்தும் குறித்த மாணவன் நேற்றைய தினம் நல்லூர் பகுதியில் மீட்கப்பட்டிருக்கிறார். பெற்றோருக்குப் பயந்து தன்னை வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்தியதாக கூறியிருக்கிறார். உறவினர்களிடத்தில் நடாத்தப்பட்ட விசாரணைகள் மூலம் இத்தகவல் வெளிவந்திருப்பதாகவும். ஆனால் கிளிநொச்சியில் எங்கிருந்துவிட்டு வந்தார் என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் சமன் சிகேரா மேலும் தெரிவித்தார். (எஸ், பா)

# அழுத்தங்களிலிருந்து விடுபட ஆட்சி மாற்றம் அவசியம்

## என்கிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான சர்வ தேச அழுத்தங்களை வெற்றி கொள்ள வேண்டுமாயின் உள் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்து வதற்கான செயற்திட்டம் ஒன்றை இன்று ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் நாடு பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் முன்னெடுப்புகளானது மிகவும் ஆபத்தான சூழலையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் அரசாங்கமோ தனது ஏமாற்று வேலைகளையும், போலி நடிப்புகளையும் உள்நாட்டில் மேடையேற்றி வருகின்றது. அரசாங் கத்திற்கு நாட்டின் மீதோ மக்களின் மீதோ கரிசனையில்லை. எனவே நாட்டை பாதுகாக்க வேண்டியது தற்போது அவசியமாகின்றது. தொழிற் சங்கங்கள், சமூக அமைப்புகள் மற்றும் மதத் தலைவர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வர வேண்டும். ஜே.வி.பி தனது துணை அமைப்புகளுடன் இணைந்து இன்று இந்த அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது.

பொது மக்களை அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து மீட்க அரசாங்கத்திடம் எந்த விதமான செயற்றிட்டங்களும் இல்லை. மாறாக பொதுமக்களை மேலும் துன்புறுத்தி ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள அரசாங்கம் முனைகின்றது. ஆகவே இந்த அச்சுறுத்தலில் இருந்து நாடு விடுபட ஒன்றிணைந்த போராட்டங்களே அவசியம் என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் மட்டக்களப்பில் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் நேற்று அதிகாலை அடையாளம் தெரியாதவர்களினால் தீ வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தை நேற்று மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கவிருந்தார்

இந்தத் தீ வைப்புச் சம்பவம் காரணமாக அலுவலகத்தின் முன் பக்கம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

தமது கட்சி அலுவலகம் தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான யு.எல்.எம். முபீன், இந்தச் சம்பவம் குறித்து தாம் யாரையும் சந்தேகிக்கவில்லை என்றும் குழப்பத்தை ஏற்படுத்த முற்படும் தீய சக்தியின் செயலாகவே இதனைத் தாம் கருதுவதாகவும் தெரிவித்தார்.

# 5 மீனவர்கள் கைது

(புதுடில்லி)

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த ஐந்து இலங்கை மீனவர்களை அந்த நாட்டின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஆந்திர மாநிலத்திற்குரிய கடற்பரப்பில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை மீனவர்கள் பயணித்த படகு மற்றும் அதிலிருந்த மீன் ஆகியவற்றையும் இந்திய கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் ஆந்திர மாநிலத்திலுள்ள நீதிமன்றமொன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆளுங்கட்சி தொழிற்சங்கங்கள் அரசுக்கு ஆதரவாக போராட்டம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவான 25 தொழிற்சங்கங்கள் பாரியளவில் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஆள் கடத்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை வலியுறுத்தும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது. உழைக்கும் மக்கள் சக்தி என்ற பெயரில் இந்த தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சங்கம், இலங்கை புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி சங்கம், திணைக்கள மற்றும் பொது தொழிலாளர் சங்கம், சுயதொழில்களில் ஈடுபடுவோர் சங்கம், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய கல்வி ஜனநயாக ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட அரசாங்கத்திற்கு ஆதரவான 25 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை நடத்த உள்ளன.

அரசாங்கத்தை நல்வழிப்படுத்தவும், அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை தோற்கடிக்கவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக குறித்த தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

# அழைப்பை ஏற்க மறுக்கும் மின்சாரசபை

(யாழ்ப்பாணம்)

யாழில் மின் தடங்கல் மற்றும் அதனோடு சம்பந்தமான பிரச்சினைகளை முறையிடுவதற்கு மின்சாரசபை உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டால் அதற்குரிய பதில்களைத் தர மறுப்பதாகவும், சிலவேளைகளில் தொலைபேசி அழைப்புக்களை ஏற்க மறுப்பதாகவும் வாடிக்கையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நேற்று இவ்வாறான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மாவிட்டபுரம், பருத்தித்துறை வாடிக்கையாளர்கள் எமக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தமது மனக்குமுறல்களைத் தெரிவித்தனர்.

# மோட்டார் வாகன எண்ணிக்கை 78 இலட்சமாக அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அடுத்த 10 வருடங்களில் 78 இலட்சம் வரையாக அதிகரிக்கும் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் சில வருடங்களில் இலங்கையில் வாகன நெரிசல் அதிகரிக்கலாம் என மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் போக்குவரத்து விநியோக முகாமைத்துவ கற்கைப் பிரிவின் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார்.

தற்போது பயன்படுத்தப்படுகின்ற 30 இலட்சம் வாகனங்களுக்கு ஏற்ற வகையில் இலங்கையின் வீதிக் கட்டமைப்பு அமைக்கப்படவில்லை.

மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் வாகன நெரிசல் ஏற்படுவதை தடுப்பதற்காக புதிய போக்குவரத்து முறைமைகள் குறித்து பொது மக்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தற்போது ஆயிரத்திற்கு 130 வாகனங்கள் வீதம் காணப்படுவதுடன், இது அடுத்த 10 ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்றார்.

இதனிடையே வாகன நெரிசலை எதிர்கொள்ளும் வகையில் வீதிகளை அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

# உலக வங்கியின் நிபந்தனைகள் தெரியப்படுத்தப்பட வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கல்வி நடவடிக்கைகளின் அபிவிருத்தி திட்டங்களுக்காக உலக வங்கியினால் வழங்கப் பட்டு வரும் உதவித் திட்டங்களுக்கான சகல நிபந்தனைகளையும் தமக்கு தெரிவிக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இந்த வருடத்தில் 10 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை வழங்குவதற்கு உலக வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளதாக அந்த சங்கத்தி[illegible] செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மனித உரிமை நிலை குறித்துப் பேச அமெரிக்காவிற்கு அருகதை இல்லை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து பேசுவதற்கு அமெரிக்காவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உலகில் மிகவும் மோசமான முறையில் மனிதவுரிமைகளை மீறுவது அமெரிக்கா என்பதை இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்டிருந்த 2011ஆம் ஆண்டுக்கான உலக மனிதவுரிமை நிலைமைகள் குறித்த அறிக்கையில் இலங்கை மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

உலக நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்கா விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில் எமது நாடு தொடர்பிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைத்துள்ளது.

இவ்வறிக்கையில் குடும்ப ஆட்சி, ஆள்கடத்தல், ஊடக அடக்குமுறை என அடிப்படையற்ற முறையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைத்துள்ளது. இதனை ஜாதிக ஹெல உறுமய கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

போலியான மனிதவுரிமைக் குற்றச்சாட்டுகளை முன் வைத்து இலங்கையின் நற்பெயரைச் சீரழிக்க மேற்கத்தேய சக்திகள் முன்னெடுக்கும் சூழ்ச்சியை அரசாங்கம் தோல்வியடையச் செய்ய வேண்டும்.

இலங்கையின் தேசிய அரசியலை விமர்சிக்கும் அதிகாரம் எந்தவொரு மேற்கத்தேய நாடுகளுக்கும் கிடையாது. அதற்கான அனுமதியை ஆட்சியிலுள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வழங்கக் கூடாது. அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் பிரிவினைவாத சக்திகளுக்கு ஏற்ற வகையில் நாட்டின் அரசியல் சூழலை மாற்றி அமைக்கும் முயற்சிகளில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச குழுக்கள் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னர் இச்சக்திகள் கடுமையாக செயற்பட ஆரம்பித்துள்ளன.

இதனை வேடிக்கை பார்ப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு சாதகமாக அமையாது. மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பேசுவதற்கு அமெரிக்காவுக்கு எவ்விதமான தகுதியும் கிடையாது. ஏனெனில் அமெரிக்காவே உலகில் மிகவும் மோசமாக மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. இதனை ஹிலாரி கிளின்டன் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் உள்விவகாரங்களில் அநாகரிகமான முறையில் தலையிடுதை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் நில அதிர்வு

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் நேற்று இரவு நில அதிர்வொன்று உணரப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நுவரெலியா, ஹட்டன், பதியபெலல்ல உள்ளிட்ட பகுதிகளில் இது நன்றாக உணரப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நில அதிர்வு இலங்கைக்குள் மாத்திரம் உணரப்பட்டதொன்றாகவே கிடைக்கப் பெற்ற தகவல்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியின் காரணமாக இது ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடக பிரிவு தெரிவித்தது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.